# பொருளியல்

## க.பொ.த உயர்தரம்

# கருத்திரங்கு 2016

தொடர் - 06

## தேர்ச்சி - 08 : அரச பொருளாதாரம்

## தேர்ச்சி - 09 : சர்வதேச வர்த்தகமும் நிதியும்

சிறு குறிப்புக்கள்

மாதிரி வினா விடைகள்

புள்ளித்திட்ட விளக்கம்

பல்தேர்வு வினாக்கள்


# S.Jeyakumar

(B.A(Hons) ECO SPI, M.A.in Eco, P.G.D.E)

யா/வயாவிளான் மத்திய கல்லூரி

# 1. அரச பொருளாதாரம்

## A. சந்தைப் பொருளாதாரத்தில் அரசின் தலையீடு

### சந்தைப் பொருளாதாரத்தில் அரசின் வகிபாகம்

அ) வள ஒதுக்கீட்டில் வினைத்திறனை ஏற்படுத்துதல்.

- பொதுப்பண்டங்களை வழங்குதல்.
- வெளிவாரிகளை கையாளுதல்.
- நிறைவில் போட்டியைத் தவிர்த்தல்.
- பொதுச் சொத்துக்கள் மீதான உரிமையை உறுதிப்படுத்தல்

ஆ) நியாயமான வருமான மறுபங்கீட்டினை ஏற்படுத்துதல்.

இ) பேரினப் பொருளாதார உறுதித் தன்மையைப் பேணுதல்.

ஈ) பொருளாதார வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் மேம்படுத்தல்.

உ) சட்டங்களை ஆக்குவதும் நல்லாட்சியும்.

### சந்தைத் தோல்வி

- வள ஒதுக்கீட்டில் செயற்றிறன் இன்மை.
- வள ஒதுக்கீட்டில் நியாயத்துவமின்மை.
- பொருளாதார உறுதியின்மை.
- விலைப்பொறிமுறையால் வளங்கள் சமூகத்தின் நன்மைகருதி ஒதுக்கீடு செய்யப்படாத நிலைசந்தைத் தோல்விஎனப்படும்.
- வளஒதுக்கீட்டில் வினைத்திறன் அற்றநிலை காணப்படுதலைக் குறிக்கும்.
- சமூகநோக்கில் வளஒதுக்கீட்டில் வினைத்திறன் ஏற்படுவதற்கு சமூகஎல்லை நலன் (SMB) சமூகஎல்லைச் செலவுக்கு (SMC) சமமாகக் காணப்படவேண்டும். அத்தகைய நிலைகாணப்படாதபோது சந்தைத் தோல்வி ஏற்படும்.

நம்பிக்கையை விடாதே!

அதுதான் வெற்றியின் முதல் படிக்கட்டு.

| சந்தைத் தோல்விக்குரிய காரணங்கள் | சந்தைத் தோல்வியை சீர்செய்யும் அளவீடுகள் |
|---|---|
| • வெளிவாரி விளைவுகள்.<br>• பொதுப்பண்டங்கள் நிரம்பல் செய்யப்படாமை.<br>• மேன்மைப்பண்டங்கள் குறைவாக உற்பத்திசெய்தல்.<br>• மேன்மையல்லாப் பண்டங்களின் மிகை உற்பத்தி.<br>• நிறைவில் போட்டி.<br>• தகவல்கள் பூரணமற்றதாயிருத்தல்.<br>• பொதுவளங்கள் மிகைப்பயன்பாட்டிற்கு உட்படுதல்.<br>• காரணி அசைவின்மை.<br>• சமமற்றவருமானப் பங்கீடு. | • அரசு வழங்கல்<br>• சொத்துரிமையை உறுதுசெய்தல்<br>• வரி விதித்தல்<br>• மானியம் வழங்கல்<br>• ஒழுங்கு விதிகள்<br>• தடை செய்தல்<br>• வருமான மீள்பங்கீடு |

### வெளிவாரி விளைவுகள்

**1. உற்பத்தியில் நேர்க்கணிய விளைவு**

Eg : 1. பூந்தோட்டமும் தேனீ வளர்ப்பும்

2. புதிய தொழினுட்பம் சம்பந்தமான ஆராட்சி

**2. உற்பத்தியில் எதிர்க்கணிய விளைவு**

Eg : i. ஒரு ஒரு இரசாயனத் தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுப்பொருட்களை அருகிலுள்ள ஆற்றுக்குள் கொட்டுதல்

ii. மரத்தளபாட உற்பத்தி நிறுவனம் காட்டு மரங்களை அழிப்பதால் விவசாயம் செய்வோர் பாதிக்கப்படல்

**3. நுகர்வில் நேர்க்கணிய விளைவு**

Eg : i. நோய்களுக்கெதிரான தடுப்பூசி ஏற்றல்

ii. கல்வி


**4. நுகர்வில் எதிர்க்கணிய விளைவு**

Eg: i. புகைப்பிடித்தல், மதுப்பாவனை துஸ்பிரயோகம்


ii. வாகனங்களிலிருந்து வெளியேறும் புகை

நல்லகாலம் பிறக்கும் என்கிற நம்பிக்கை தவிர நலிவோர்க்கு வேறு மருந்து கிடையாது.

**உற்பத்திவெளிவாரி நன்மையும் சந்தைத் தோல்வியும்.**




**உற்பத்திவெளிவாரித் தீமையும் சந்தைத் தோல்வியும்.**




PmB - Private marginal Benefit

SmB - Social marginal Benefit

PmC - Private marginal Cost


SmC - Social marginal Cost

EmB - External marginal Benefit


EmC - External marginal Benefit

| |
|---|
| • SmB = PmB + EmB |
| • SmC = PmC + EmC |

**நுகர்வில் வெளிவாரி நன்மையும் சந்தைத் தோல்வியும்.**




**நுகர்வில் வெளிவாரித் தீமையும் சந்தைத் தோல்வியும்.**



- **பொதுப்பண்டம்** (Public goods)
  - நுகர்வில் போட்டித்தன்மையற்றது.
  - விலக்குதல் விதிக்கு உட்படாதவை (கொடுப்பனவைச் செய்யாதவர் குறித்த பண்ட நுகர்விலிருந்து விலக முடியாதிருத்தல்)

  Eg: வீதிவெளிச்சம், வீதிச் சமிக்ஞை, வெளிச்சவீடு, மணிக்கூட்டுக் கோபுரம், சூழல் பாதுகாப்பு.

**1. National Public Goods**

- நாட்டின் தேசிய எல்லைக்குள்ளவர்கள் நன்மையை அனுபவிப்பர்.

Eg : i. தேசிய பாதுகாப்பு
ii. தேசிய வானிலை எதிர்வுகூறல்.

**2. Reginal Public Goods**

- ஒரு பிராந்தியத்திற்குள்ளவர்கள் நன்மை அனுபவிப்பர்.

Eg : i. பிராந்திய பொருளாதார ஒத்துழைப்புக்குரிய உடன்படிக்கைகள்.

**3. International / Global Public Goods**

- சர்வதேச மட்டத்தில் நன்மையை அனுபவிப்பர்

Eg : i. ஓசோன் படை பாதுகாப்பு.
ii. புவி வெப்பமடைதலைத் தடுத்தல்
iii. அறிவு உருவாக்கம்
iv. சர்வதேச பயங்கரவாதத்திற்கு எதிரான பாதுகாப்பு.

- **தனியார்பண்டம்** (Private goods)
  - நுகர்வில் போட்டித்தன்மையைக் கொண்டது.
  - விலக்குதல் விதிக்குஉட்படும்.

  Eg: உணவு, ஆடை,வாகனங்கள்.

- **போலிப் பொதுப்பண்டம் /அரைகுறைபொதுப்பண்டம் /குழுப்பண்டம்**

  (Semi Public goods)
  - நுகர்வில் போட்டித்தன்மையற்றது.
  - விலக்குதல் விதிக்கு உட்பட்டவை
  - Eg: போக்குவரத்துப் பாதைகள், பாலம், நூலகம், பூந்தோட்டம், நூதனசாலை.

- **பொது வளம்**

  (Common Resource)
  - நுகர்வில் போட்டித்தன்மையைக் கொண்டது.
  - விலக்குதல் விதிக்கு உட்படாதவை

  Eg: கடல்வளம்,வனவளம்,பொதுப் புற்றரை, தூயகாற்று,தரைக்கீழ் நீர்

- **கெட்டபண்டம்/தொல்லைதரும்பண்டம்**

  (Bad goods / Nuisance goods)
  - எதிர்க்கணிய பயனைத்தரும்.
  - பூச்சிய விலையில் பெறப்படும்.

  Eg: குப்பை கூழங்கள், சாக்கடைநீர்

தனது குற்றங்களை மறந்து பிறரின் உள்ளத்தில் உள்ளதைக் கண்டுபிடிப்பது தவறு.

- **மேன்மைப்பண்டம்** (Merit goods)
  - நுகர்வில் நேர்க்கணிய வெளிவாரி விளைவைக் கொண்டவை.
  - தனியார்நலனைவிட சமூகநலனைப் பெரிதாகக் கொண்டிருக்கும்.

Eg: கல்வி, சுகாதாரம், மருத்துவம்.

- **மேன்மையல்லாப் பண்டம் /தீங்கிழைக்கும் பண்டம்**
- (De merit goods)
  - நுகர்வில் எதிர்க்கணிய வெளிவாரி விளைவைக் கொண்டவை.
  - தனியார்நலனைவிட சமூகநலனைப் குறைவாகக் கொண்டிருக்கும்.

Eg: மதுபானம், சிகரெட், போதைப் பொருட்கள்

**வருமான மறுபங்கீட்டில் சமத்துவத்தை ஏற்படுத்துவதற்காக அரசுமேற்கொண்டுள்ள நடவடிக்கைகள்**

- விருத்திமுறையிலான வரிவிதிப்பை மேற்கொள்ளல்.
- ஆடம்பரப்பண்டங்களுக்கு கூடியவரியையும், அத்தியாவசியப் பண்டங்களுக்கு குறைந்த வரியையும் அறவிடல்.
- குறைந்தவருமானப் பிரிவினர்களுக்கு மாற்றங்களை வழங்குதல்.
- குறைந்தபட்சக் கூலிக்கொள்கையை நடைமுறைப்படுத்தல்.
- சொத்துரிமைக்கான உச்சவரம்பெல்லையை நிர்ணயித்தல்.
- நிலச்சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- வறியோர் சார்பான பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துதல்.

**அரசதோல்வி**

சந்தைப் பொருளாதாரத்தில் அரசின் தலையீடு காரணமாக பொருளாதாரத்தில் செயற்றிறன் இன்மைகளும் ஏற்றத்தாழ்வுகளும் தோன்றுதல் அரசதோல்வி எனப்படும்

**காரணங்கள்**

- அரச செயற்பாடுகளில் காணப்படும் இறுக்கத்தன்மை.
- அரசியல் சுயலாப நோக்கச் செயல்கள்.
- அரசின் தூர நோக்கமற்ற கொள்கை.
- பூரணமற்ற தகவல்களின் அடிப்படையில் கொள்கைத் தீர்மானங்களை மேற்கொள்ளல்.
- அரச நிர்வாகச் செலவுகள் உயர்வாக இருத்தல்.
- ஊக்குவித்தல் செயற்பாடுகளின் பிரதிகூலமான தாக்கம்.
- அரசியல் சுயநலன்கள்.

## B. அரசின் வருமானம் /அரசிறை

- வரிஅரசிறை
  - நேர் வரி
    - வருமான வரிகள்
    - சொத்து வரிகள்
  - நேரில் வரி
    - உள்நாட்டு பொருள், பண்டம் மீதானவரிகள்
    - சர்வதேச வர்த்தகத்தின் மீதானவரிகள்.
- வரியல்லாதஅரசிறை
  - மத்தியவங்கியின் இலாபங்கள்
  - அரசதுறை நிறுவனங்களின் இலாபங்களும் பங்கிலாபங்களும்
  - அரசின் சொத்துவருமானம், (வாடகை)
  - தேசியலொத்தர்சபையின் இலாபம்.
  - கட்டணங்களும், நிர்வாக அறவீடுகளும்

| நேர்வரி | நேரில் வரி |
|---|---|
| • வரி இறுப்பாளரினால் வரிச்சுமை முழுமையாகத் தாங்கப்படும்.<br>• வரிப்பெயர்ச்சி இல்லை.<br>• வருமானம், செல்வம், சொத்து என்பவற்றின் மீதுஅறிவிடப்படும்.<br>Eg : தனியாள் வருமானவரி,கம்பனி வருமானவரி. | • வரி இறுப்பாளரினால் வரிச்சுமை பகுதியாக /முழுமையாகப் பிறர்மீது சுமத்தப்படும்.<br>• வரிப்பெயர்ச்சி உண்டு<br>• உற்பத்தி, விற்பனை செயற்பாடு-களுக்கு அறிவிடப்படும்.<br>Eg : பெறுமதிசேர்வரி, இறக்குமதி தீர்வை. |

சராசரி வரிவீதம் (ATR) Average Tax Rate

$$\text{சராசரி வரிவீதம் (ATR)} = \frac{\text{மொத்த வரித்தொகை}}{\text{வரியின் அடிப்படைப் பெறுமானம்}}$$

எல்லை வரிவீதம் (MTR) Marginal Tax Rate

$$\text{எல்லை வரிவீதம் (MTR)} = \frac{\text{மொத்த வரிப்பண மாற்றம்}}{\text{வரியின் அடிப்படைப் பெறுமான மாற்றம்}}$$

## வரிஅறவிடப்படும் விகிதங்களுக்கமைய வரிகளை வகைப்படுத்துதல்

1. விருத்திமுறை வரி

   வரிஅடிப்படை (வருமானம், சொத்து) விரிவாக்கமடையும்போது அறவிடப்படும் வரிவீதமும் அதிகரித்துக்கொண்டு செல்லுதல்.

   Eg : தனியாள் வருமான வரி

2. விகிதசம வரி

   வரி அடிப்படை விரிவாக்கமடையும்போது அறவிடப்படும் வரி வீதமும் மாறாதிருத்தல்.

   Eg : பெறுமதி சேர்வரி

3. தேய்வு முறைவரி.

   வரி அடிப்படை விரிவாக்கமடையும்போது அறவிடப்படும் வரிவீதம் குறைந்துகொண்டு செல்லுதல்.

   Eg : கலால் தீர்வை

## வரித்தாக்கம்

**1. சட்டரீதியானவரித்தாக்கம்**

- நிர்வாகரீதியில் வரி யாரால் செலுத்தப்படுகின்றது என்பதனை சட்டரீதியான வரித்தாக்கம் குறிக்கும்.
- இங்கு அரசிற்கு சட்டரீதியாக எவர்வரியினைச் செலுத்தகின்றார் என்பதனை இது குறிக்கும்.

**2. பொருளாதாரரீதியானவரித்தாக்கம்**

- வரிச்சுமையினை யார்தாங்குகின்றார்கள் என்பதனை பொருளாதார ரீதியான வரித்தாக்கம் குறிக்கும்.
- பண்டங்கள் மீதுவரிஅறவிடும்போது வரிச்சுமையின் ஒருபகுதியை நுகர்வோரும், ஒருபகுதியினை விற்பனையாளரும் தாங்குவர்.

நம்புபவனுக்கு எல்லாக் காரியங்களும் கைகூடும்

### வரிப்பெயர்ச்சி

- வரிச்சுமையை ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு மாற்றுதலை வரிப்பெயர்ச்சிஎன்பர்.
- வரிப்பெயர்ச்சியில் இரு பிரிவுகள் உண்டு.

1. **முன்னோக்கிய வரிப்பெயர்ச்சி**

   உற்பத்தியாளர் மீது விதிக்கப்படும் வரி கொள்வனவாளர்களுக்கு மாற்றப்படல்.
2. **பின்னோக்கிய வரிப்பெயர்ச்சி**

   உற்பத்தியாளர் மீதான வரிச்சுமையின் ஒருபகுதி காரணச்சேவை வழங்குனர் மீது சுமத்தப்படல்.

### சிறந்தவரியொன்றின் விரும்பத்தக்கபண்புகள்

1. சமத்துவம் /நியாயத்துவம்
2. இலகுத்தன்மை
3. நிச்சயத்தன்மை
4. சிக்கனத்தன்மை
5. எளிமைத்தன்மை
6. நெகிழ்தன்மை
7. நடுநிலைத்தன்மை

**அரசாங்கம் திரட்டும் வரியின் அளவை தீர்மானிக்கும் காரணிகள்**

1. வரி அடிப்படை
2. வரி வீதம்
3. வரி இசைவு

### வரியின் சமத்துவம் (Equity)

- வரிப்பளு நியாயமானதாக இருக்க வேண்டும்
- வரிச்செலுத்தும் ஆற்றலுக்கு ஏற்ப வரி அறவிடப்படல் வேண்டும்.

1. கிடையான சமத்துவம்

   சமமான பொருளாதார நிலையிலுள்ள நபர்கள் மீது சமமான வரிச்சுமை காணப்பட வேண்டும்.
2. குத்தான சமத்துவம்


   பொருளாதாரரீதியில் சமமற்ற நிலையிலுள்ள நபர்கள் மீது வரிச்சுமை சமமற்ற விதத்தில் காணப்பட வேண்டும்.

### வரி நடுநிலைமை (Neutrality)

- வரிகள் சந்தைப் பொறிமுறையில் குழப்பநிலையினை ஏற்படுத்தக் கூடாது.
- பொருளாதார தீர்மானம் எடுத்தலில் தலையிடவோ / செல்வாக்குச் செலுத்தவோ கூடாது.
- மிகைவரிச் சுமையினை ஏற்படுத்தக் கூடாது.

வரியின் மிகைச்சுமை

- வரியின் காரணமாக சுமக்க நேரிடும் பணரீதியான வரிச்சுமைக்கு மேலதிகமாக பொருளாதாரத்தில் ஏற்படுத்தப்படும் சுமையை வரியின் மிகைச்சுமை என்பர்.
- விற்பனையாளரும், நுகர்வோரும் இழக்கின்ற மிகை அரசு திரட்டும் வரி வருமானத்திற்கு மேலதிகமாகக் காணப்படல்.




இலங்கைஅரசின் வருமானம்

| விபரம் | மொத்தஅரசிறையில் சதவீதம் | | GDP யில் சதவீதம் | |
|---|---|---|---|---|
| | 2014 | 2015 | 2014 | 2015 |
| வரிஅரசிறை | 88 | 93 | 10.1 | 12.1 |
| வரியல்லாதஅரசிறை | 12 | 7 | 1.4 | 0.9 |
| மொத்தஅரசிறை | 100 | 100 | 11.5 | 13.0 |

| விபரம் | மொத்தஅரசிறையில் சதவீதம் | | GDP யில் சதவீதம் | |
|---|---|---|---|---|
| | 2014 | 2015 | 2014 | 2015 |
| வருமானவரி | 17 | 18 | 1.9 | 2.3 |
| பெறுமதிசேர்வரி | 23 | 15 | 2.6 | 2.0 |
| கலால் தீர்வை | 21 | 34 | 2.5 | 4.4 |
| இறக்குமதிதீர்வை | 7 | 9 | 0.8 | 1.2 |
| ஏனையவை | 20 | 17 | 2.3 | 2.2 |
| மொத்தவரிஅரசிறை | 100 | 100 | 10.1 | 12.1 |

வினா

i. சமீப ஆண்டின் இலங்கை அரசின் வரிக்கட்டமைப்புத் தன்மையை சுருக்கமாக விளக்குக.

ii. இலங்கை அரசின் வரிவருமானம் மொத்தஉள்நாட்டு உற்பத்தியில் குறைவாக இருப்பதற்குரிய காரணங்கள் யாவை?

iii. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இலங்கை அரசின் வரிவருமானத்தை அதிகரிப்பதற்குரிய வழிமுறைகளை தருக.

## C. அரசின் செலவுகள்

- நடைமுறை செலவு
  - அரசின் பொருள் பணிகள் மீதான செலவுகள்
  - பொதுப்படு கடன் மீதானவட்டிக் கொடுப்பனவுகள்
  - அரசின் நடைமுறை மாற்றல்களும் மானியங்களும்
- மூலதனச் செலவு
  - உண்மைச் சொத்துக்களின் கையேற்பு
  - மூலதன மாற்றல்கள்
  - குறை செலவு ஒதுக்கு

## அரசின் நடைமுறைச் செலவு

- அரசசேவைகளைத் தொடர்ச்சியாகச் செய்வதற்காக செய்யப்படும் செலவுகள் அரசின் நடைமுறைச்செலவு எனப்படும்.

நடைமுறைச் செலவு பொருளாதார அடிப்படையில் மூன்று வகைப்படும்.

1. அரசின் பொருள் பணிகள் மீதான செலவுகள்
2. பொதுப்படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள்
3. அரசின் நடைமுறை மாற்றல்களும் மானியங்களும்

## அரசின் மூலதனச் செலவும் அதன் முக்கியத்துவமும்

- மூலதனப் பொருட்களை உருவாக்குவதற்காக அரசினால் மேற்கொள்ளப்படும் செலவுகள் அரசின் மூலதனச் செலவு எனப்படும்.

<u>**முக்கியத்துவம்**</u>

- நாட்டின் மூலதன இருப்பினை அதிகரிக்கச் செய்யும்.
- பொருளாதார வளர்ச்சிக்கு உந்துசக்தியாக அமையும்.
- பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகள் விருத்தியடையும்.
- தனியார்துறையின் முதலீடுகளை அதிகரிப்பதற்கான சூழலை உருவாக்கும்.

## இலங்கை அரசினால் வீட்டுத்துறைக்கு வழங்கப்படும் நடைமுறைமாற்றல்களும், மானியங்களும்

1. ஓய்வூதியக் கொடுப்பனவு
2. சமுர்த்திமானியம்
3. பாதிக்கப்பட்டபோர் வீரர்களுக்கான உதவிகள்.
4. பாடசாலை மாணவருக்குரிய இலவசபாடநூல், சீருடைத்துணி, போசாக்கு, வேலைத்திட்டம்.
5. கர்ப்பிணித் தாய்மாருக்குரிய போசணைத்திட்டம்.
6. வெள்ள, வரட்சி நிவாரணங்கள்.
7. அரச வைத்தியசாலைக்குரிய இலவச மருந்து.
8. உரமானியம்.
9. விதவைகள், முதியவர்களுக்குரிய உதவிக் கொடுப்பனவுகள்.
10. புலமைப்பரிசில், மகாபொல கொடுப்பனவுகள்.

**நடைமுறை மாற்றல்களை பெற்றுக்கொள்ளும் அரசநிறுவனங்கள்**

- இலங்கை புகையிரத திணைக்களம்.
- இலங்கை போக்குவரத்து சபை.
- இலங்கை தபால் திணைக்களம்.
- இலங்கை மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை.
- தெங்கு பயிர்ச்செய்கை சபை.
- அணுசக்தி அதிகாரசபை.
- இலங்கை கடற்றொழில் துறைமுகக் கூட்டுத்தாபனம்.
- கைத்தொழில் அபிவிருத்திசபை.
- மத்தியசுற்றாடல் அதிகார சபை.
- பனை அபிவிருத்தி சபை.

**மூலதனமாற்றல்களைப் பெற்றுக்கொள்ளும் அரசநிறுவனங்கள்**

- தெங்கு பயிர்ச்செய்கை சபை.
- இலங்கை மகாவலி அதிகாரசபை
- அணுசக்தி அதிகாரசபை
- இலங்கை போக்குவரத்து சபை.
- இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தானம்.
- மத்தியசுற்றாடல் அதிகாரசபை.
- தேசியவீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை.
- நகர அபிவிருத்தி அதிகாரசபை.
- வீதி அபிவிருத்தி அதிகாரசபை.
- நெல் சந்தைப்படுத்தல் சபை.

* **நடைமுறைச் செலவின் பொருளாதாரப் பகுப்பாய்வு**

| விபரம் | நடைமுறைச் செலவின் சதவீதம் | | **GDP** யில் சதவீதம் | |
|---|---|---|---|---|
| | 2014 | 2015 | 2014 | 2015 |
| 1. பொருட்கள், பணிகள் மீதான செலவு. | 46% | 45 | 5.4 | 6.9 |
| 2. நடைமுறை மாற்றல்களும், மானியமும் | 21% | 25 | 3.0 | 3.5 |
| 3. வட்டிக் கொடுப்பனவுகள் | 33% | 30 | 4.2 | 4.6 |
| நடைமுறைச் செலவு | 100 | 100 | 12.7 | 15.2 |

* நடைமுறைச் செலவின் தொழிற்பாட்டுரீதியான பகுப்பாய்வு

| விடயம் | | சதவீதம் | |
|---|---|---|---|
| | | 2014 | 2015 |
| 1. | அரச பொதுப்பணிகள் | 25 | 25 |
| 2. | சமூகப் பணிகள் | 34 | 33 |
| 3. | பொருளாதாரப் பணிகள் | 8 | 10 |
| 4. | ஏனையவை (வட்டிக் கொடுப்பனவு) | 33 | 32 |
| நடைமுறைச் செலவு | | 100 | 100 |

* அரசின் செலவீனமும் மீள்கொடுப்பனவுக்கான கழித்த கடன் வழங்கலின் பொருளாதாரப் பகுப்பாய்வு

| விபரம் | மொத்தச் செலவின் சதவீதம் | | GDP யில் சதவீதம் | |
|---|---|---|---|---|
| | 2014 | 2015 | 2014 | 2015 |
| 1. நடைமுறைச் செலவு | 73 | 74 | 12.7 | 15.2 |
| 2. மூலதனச் செலவு | 26 | 26 | 4.4 | 5.3 |
| 3. மீள்கொடுத்ததை கழித்த கடன் வழங்கலில் | 1 | 0.02 | 0.1 | - |
| மொத்தம் | 100% | 100% | 17.2 | 20.5 |

## D. அரச வரவுசெலவுத்திட்ட பற்றாக்குறையும் நிதியீட்டமும்

| விடயம் | GDP யில் சதவீதம் | | |
|---|---|---|---|
| | 2013 | 2014 | 2015 |
| அரசிறை மற்றும் நன்கொடை | 12.0 | 11.5 | 14.7 |
| அரசிறை | 11.9 | 11.4 | 14.6 |
| செலவீனமும் தேறிய கடன் வழங்கலும் | 17.4 | 17.2 | 20.6 |
| அரச பாதீட்டு மொத்தப் பற்றாக்குறை | -5.4 | -5.7 | -5.9 |

- அரச பாதீட்டின் நடைமுறைக் கணக்கு மீதி = அரச வருமானம் - அரச நடப்புச் செலவு.

- அரச பாதீட்டின் மொத்தபற்றாக்குறை = அரசின் மொத்தப் பெறுகை - அரச செலவீனமும் தேறிய கடன் வழங்கலும

- அரச பெறுவனவு = வரி அரசிறை + வரியல்லாத அரசிறை + கொடைகள்
- அரச கொள்வனவும் தேறிய கடன் வழங்கலும் = நடைமுறைச் செலவு + மூலதனச் செலவு + தேறிய கடன் வழங்கல்

- அரச பாதீட்டின் ஆரம்பப் பற்றாக்குறை = அரச பாதீட்டின் மொத்தப் பற்றாக்குறை - அரச கடன்களுக்குரிய வட்டிக் கொடுப்பனவு

- அரச பாதீட்டின் தேறிய காசுக்குறை = அரச பாதீட்டின் மொத்தப் பற்றாக்குறை - அரச கடன் மீள் கொடுப்பனவு

வினா

இலங்கை அரசின் இறைத்தொழிற்பாடுகள் தொடர்பான விபரங்கள் வருமாறு, பெறுமதிகள் மில்லியன் ரூபாவில்.

| | |
|---|---|
| வரி அரசிறை | 1005000 |
| வரியல்லாத அரசிறை | 131000 |
| கொடைகள் | 15000 |
| மீண்டெழும் செலவு | 1205000 |
| வட்டிக் கொடுப்பனவுகள் | 444000 |
| மூலதனச் செலவுகள் | 454000 |
| மீள் கொடுப்பனவு கழித்த தேறிய கடன் வழங்கல் | 9000 |
| கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவு | 203000 |

பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

i) அரச பாதீட்டின் நடைமுறைக்கணக்கு மீதி.

..........................................................................................................................................

..........................................................................................................................

ii) அரச பாதீட்டின் மொத்தப் பற்றாக்குறை?

..........................................................................................................................................

..........................................................................................................................

iii) அரச பாதீட்டின் ஆரம்பப் பற்றாக்குறை?

..........................................................................................................................................


..........................................................................................................................

iv) தேறிய காசுப் பற்றாக்குறை?

..........................................................................................................................................

..........................................................................................................................

| விடயம் | GDP யில் சதவீதம் | | | |
|---|---|---|---|---|
| | 2012 | 2013 | 2014 | 2015 |
| அரசபாதீட்டின் நடைமுறைக்கணக்குப் பற்றாக்குறை | - 0.9 | - 0.7 | - 1.2 | - 0.8 |
| அரசபாதீட்டின் மொத்தப் பற்றாக்குறை | - 5.6 | - 5.4 | - 5.7 | - 5.9 |
| அரசபாதீட்டின் ஆரம்பப் பற்றாக்குறை | - 0.9 | - 0.8 | - 1.5 | - 1.8 |



**சந்தைக்கடன் கருவிகள்**

1. திறைசேரி முறிகள்
2. திறைசேரி உண்டியல்கள்
3. ரூபாய்க்கடன்
4. இலங்கை அபிவிருத்தி முறிகள்
5. மத்தியவங்கி தற்காலிக முற்பணம்.

- **இலங்கை அரசு பாதீட்டுப் பற்றாக்குறைக்கு நிதியிடுவதற்கு அண்மையாண்டுகளில் பயன்படுத்திய மூலங்கள்.**

| | GDP யில் % (2014) |
|---|---|
| 1. உள்நாட்டு நிதியிடல் | 3.6 |
| - சந்தைக் கடன் | 3.7 |
| i) வங்கிக் கடன் | 1.2 |
| ii) வங்கியல்லாக்கடன் | 2.5 |
| - சந்தையல்லாக் கடன் | - 0.1 |
| 2. வெளிநாட்டு நிதியிடல் | 2.0 |
| மொத்த நிதியிடல் | 5.7 |

**அரச பாதீட்டின் மொத்தப் பற்றாக்குறையின் பொருளாதார விளைவுகள்**

- அரச கடன் சுமையை அதிகரிக்கச் செய்யும்.
- நிதியிடலில் வங்கிக்கடன்கள் பயன்படுத்தப்பட்டால் பணவீக்கம் தோற்றம் பெறும்.
- வட்டி வீதங்களை அதிகரிக்கச் செய்யும்.
- தனியார் முதலீட்டினை குறைக்கும்.
- உள்நாட்டுச் சேமிப்பு குறைவடையும்.
- பேரினப் பொருளாதார உறுதியின்மை ஏற்படுத்தும்.

**அரச பாதீட்டின் பற்றாக்குறையை நிதியிடுவதற்காக உள்நாட்டு வங்கிக் கடன்களை பயன்படுத்துவதனால் ஏற்படும் விளைவுகள்**

- மத்திய வங்கியிடமிருந்து கடன்களை பெற்றுக்கொள்ளும்போது மத்திய வங்கியின் தேறிய உள்நாட்டு சொத்து அதிகரிக்க ஒதுக்குப்பணம் அதிகரித்து பணநிரம்பல் விரிவடையும்.
- வர்த்தக வங்கிகளிலிருந்து கடன்களைப் பெறும்போது கடனாக்கச் செயற்பாட்டினால் பணநிரம்பல் அதிகரிக்கும்.
- பணவீக்க விளைவுகளைக் கொண்டு வரும்.

## இறைக் கொள்கை (அரச நிதிக் கொள்கை)

- அரசாங்கம் பொருளாதார நோக்கங்களை அடையும் வகையில் அரச வருமானம் (வரி) அரசின் செலவீனங்கள், அரச கடன் போன்றவற்றை ஒழுங்குபடுத்திக் கொள்ளும் நடவடிக்கையை இறைக்கொள்கை என்பர்.
- இறைக்கொள்கை மூலம் மொத்தக் கேள்வியை ஒழுங்குபடுத்தி பொதுவிலைமட்டம், மெய்வெளியீடு போன்றவற்றில் செல்வாக்கினைச் செலுத்த முடியும்.
- இறைக்கொள்கை பின்வரும் பேரினப்பொருளாதார மாறிகளில் செல்வாக்குச் செலுத்தும்.

$$Y=C+I+G$$

$$Y=C+S+T$$

* **அரசகடன் வீதம்**

| விபரம் | GDP யில் சதவீதம் | | | |
|---|---|---|---|---|
| | 2012 | 2013 | 2014 | 2015 |
| உள்நாட்டுக்கடன் | 37.0 | 40.0 | 40.9 | 44.3 |
| வெளிநாட்டுக் கடன் | 31.7 | 30.8 | 29.8 | 31.7 |
| மொத்தக் கடன் | 68.7 | 70.8 | 70.7 | 76.0 |

* **அரசகடன் வீதம்**

| விபரம் | அரசிறையில் சதவீதம் | | | |
|---|---|---|---|---|
| | 2012 | 2013 | 2014 | 2015 |
| அரசகடன் (மில்.ரூபா) | 6000112 | 6793249 | 7390899 | 8503227 |
| ஆரசிறை (மில்.ரூபா) | 1128926 | 1214497 | 1289039 | 1520960 |
| சதவீதம் | 531 | 559 | 573 | 559 |

* அரசமொத்தபடுகடன் சேவைவீதம்

| விபரம் | 2012 | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|
| 1.மொத்த உள்நாட்டு உற்பத்தியில் | 96 | 12 | 10 | 12 |
| 2. அரசிறையில் | 96 | 102 | 90 | 91 |

## நிரம்பல் அதிகரிப்புக் கொள்கை

- ஒரு பொருளாதாரத்தின் உற்பத்தியை அதிகரிப்பதற்கான அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் அனைத்தும் நிரம்பல் அதிகரிப்புக் கொள்கை எனப்படும்.
- இக்கொள்கையினை செயற்படுத்தும்போது முதலீடுகள் அதிகரிப்பதுடன், உற்பத்திச் செலவுகள் குறைவதுடன் காரணிகளின் விளைதிறன் அதிகரிக்கும்.
- நிரம்பல் அதிகரிப்புக் கொள்கையுடன் தொடர்புடைய விடயங்கள் வருமாறு:

1. வரிச்சீரமைப்பு 2. தனியார்மயமாக்கல் 3. சட்டதிட்டங்களை தளர்த்துதல்
4. ஊழியர் சந்தை மறுசீரமைப்பு 5. மூலதனச்சந்தை மறுசீரமைப்பு

## இலங்கை அரசின் வரவுசெலவுத் திட்ட (இறை) கட்டமைப்பிலுள்ள நான்கு பலவீனங்கள்

- குறைவான அரசிறை.
- அதிகரித்துச்செல்லும் செலவீனங்கள்.
- மனித அபிவிருத்திக்கான முக்கிய பொதுப் பொருட்கள் சேவைகளின் மீதான செலவீட்டில் வினைத்திறன் இன்மை.
- பொதுத் துறையில் வினைத்திறன் இன்மை.

## இறை இடைவெளி (Fiscal Space)

பேரினப்பொருளாதார உறுதிப்பாட்டை பாதிக்காத வகையில் அரசிறை, அரசின் செலவிடல் மற்றும் கடன்பாட்டுத் தேர்வுகள் தொடர்பாக தீர்மானிப்பதற்கு அரசுக்கு நெகிழ்ச்சித்தன்மையை வழங்குவதற்கு மேலதிக மூல வளங்களின் கிடைப்பனவை இறை இடைவெளி என்பர்.

## 2. சர்வதேச வர்த்தகமும் நிதியும்

### A. சர்வதேச வர்த்தகக் கோட்பாடுகள்

1. பின்வரும் அட்டவணை ஓரலகு ஊழியத்திற்கான சராசரி வெளியீட்டினை காட்டுகின்றது..

| நாடுகள் / பண்டம் | வெளியீட்டு மட்டம் | |
|---|---|---|
| | நாடு A | நாடு B |
| X பண்டம் | 20 | 12 |
| Y பண்டம் | 05 | 06 |

i) இரண்டு நாடுகளிலும் ஓரலகு X இற்கான, ஓரலகு Y இற்கான அமையச் செலவினை கணிக்குக?

........................................................................................................................

........................................................................................................................

ii) ஒவ்வொரு நாடும் எந்தெந்த பண்ட உற்பத்தியில் சிறப்புத்தேர்ச்சி அடையும்?

........................................................................................................................

........................................................................................................................

iii) வர்த்தகத்தின் மூலம் இரண்டு நாடுகளும் பரஸ்பர நன்மையடைய வேண்டுமாயின் பரிமாற்று விகிதம் எவ்வாறு காணப்படல் வேண்டும்?

........................................................................................................................

........................................................................................................................

2. ஐக்கிய அமெரிக்காவிலும், கனடாவிலும் கோதுமை, ஆடை என்பவற்றின் உற்பத்தி பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

ஓரலகு உற்பத்தி செய்வதற்கான ஊழிய மணித்தியாலம்

| பண்டம் | ஐக்கிய அமெரிக்கா | கனடா |
|---|---|---|
| கோதுமை | 10 | 08 |
| ஆடை | 25 | 16 |

i) ஓரலகு கோதுமைக்கான அமையச் செலவு, ஓரலகு ஆடைக்கான அமையச் செலவை இரண்டு நாடுகளுக்கும் கணிக்குக?

..........................................................................................

..........................................................................................

ii) எந்த நாடு கோதுமை உற்பத்தியிலும் ஆடை உற்பத்தியிலும சிறப்பியல்பு பெற வேண்டும்?

..........................................................................................

..........................................................................................

iii) எந்த நாட்டிற்கு கோதுமை உற்பத்தியிலும் ஆடை உற்பத்தியிலும் முழு நலன் உண்டு?

..........................................................................................

..........................................................................................


**ஒப்பீட்டு நயத்தினை தீர்மானிக்கும் காரணிகள்**


- காரணிக் கிடைப்பனவு வேறுபடுதல்
- தொழில்நுட்ப வேறுபாடுகள்
- உற்பத்திதிறன் வேறுபாடுகள்
- சிறப்புத்தேர்ச்சி
- விருப்பத் தெரிவில் காணப்படும் வேறுபாடுகள்
- நாடுகளின் இட அமைவு
- நாடுகளின் பருமன்களில் காணப்படும் வேறுபாடுகள்
- அளவுத்திட்ட சிக்கன வேறுபாடுகள்

**சர்வதேச போட்டித்தன்மையை நிர்ணயிக்கும் காரணிகள்**

- உற்பத்தித் திறன்
- பேரினப் பொருளாதார உறுதிப்பாடு
- உட்கட்டமைப்பு வசதிகள்
- ஆய்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் மீதான முதலீடு
- வரிக்கட்டமைப்பு
- நாணய மாற்றுவீத உறுதிபாடு
- உலக சந்தைக்கு தேவையான மனித மூலதனத்தை அடிப்படையாகக் கொண்ட கல்வி முறைமை
- வணிகம் செய்வதில் காணப்படும் செலவுகள்
  - நிர்வாக முறையின் தன்மை
  - ஊழியச் சந்தையின் நெகிழ் தன்மை
  - அரசாங்க நிர்வாகத்தின் வினைத்திறன்
  - தனியார் சொத்துரிமைப் பாதுகாப்பு
  - நல்லாட்சி
  - சட்டவாதிக்கம்

| இறக்குமதியும் வர்த்தக நலனும். | ஏற்றுமதியும் வர்த்தக நலனும். |
|---|---|




| | நுகர்வோன் மிகை | உற்பத்தியில் மிகை | பொருளாதார மிகை |
|---|---|---|---|
| இறக்குமதிக்கு முன் | A | BC | ABC |
| இறக்குமதிக்கு பின் | ABGH | C | ABGHC |
| மாற்றம் | BCH ↑ | B ↓ | GH ↑ |

| | நுகர்வோன் மிகை | உற்பத்தியில் மிகை | பொருளாதார மிகை |
|---|---|---|---|
| ஏற்றுமதிக்கு முன் | ABC | EF | ABCEF |
| ஏற்றுமதிக்கு பின் | A | EFBCD | AEFBCD |
| மாற்றம் | BC ↓ | BCD ↑ | D ↑ |

## B. வர்த்தகப் பாதுகாப்பு

### வர்த்தகப் பாதுகாப்பு

வர்த்தகப் போட்டிகளிலிருந்து உள்நாட்டு உற்பத்தியை அதிகரித்தல் வர்த்தகப் பாதுகாப்பு எனப்படும்.

### வர்த்தகப் பாதுகாப்பு செயற்பாடுகள்

1. தீர்வை வரி நடவடிக்கைகள்
   - ஏற்றுமதி தீர்வைகள்
   - இறக்குமதி தீர்வைகள்
2. தீர்வையற்ற நடவடிக்கைகள்
   - கோட்டா முறை (அனுமதிப்பங்கு)
   - இறக்குமதி தடைகள்
   - ஏற்றுமதி இறக்குமதி அனுமதிப் பத்திர முறை
   - குவித்தல்
   - செலாவணிக் கட்டுப்பாடுகள்
   - வர்த்தக ஒப்பந்தங்களை செயற்படுத்துதல்
   - உற்பத்தி தரங்களை வெளியிடல்
   - பிராந்திய பொருளாதார ஒத்துழைப்புக்கள்
   - சுய ஏற்றுமதிக் கட்டுப்பாடு

**பெயரளவு பாதுகாப்பு வீதம் (Nominal Rate of Protection)**

இறக்குமதி தாராள வர்த்தகத்தின் மீது தீர்வையினை அறவிடும்போது இறக்குமதிக்குப் பதிலாக உள்நாட்டில் உற்பத்தியாகும் பண்டங்களின் சந்தைப் பெறுமதியில் ஏற்படுகின்ற அதிகரிப்பின் சதவீதத்தை பெயரளவு பாதுகாப்பு வீதம் என்பர்

NRP =

**பயனுறுதி வாய்ந்த பாதுகாப்பு வீதம் (Effective Rate of Protection)**

தாராள வர்த்தகத்தின் மீது தீர்வையை விதிப்பதனால் உள்நாட்டு உற்பத்தியின் கூட்டிய பெறுமதியில் ஏற்படுகின்ற அதிகரிப்பின் சதவீதம் பயனுறுதி வாய்ந்த பாதுகாப்பு வீதம் எனப்படும்.

ERP =

- ERP ஐ பின்வரும் சமன்பாட்டின் மூலமும் கணிப்பிடலாம்.

$$ERP = \frac{(n - ab)}{(1 - a)} \, x \, 100$$

n = இறுதி உற்பத்தியின்மீது விதிக்கப்படும் தீர்வையின் சதவீதம்
a = இறுதி உற்பத்தியில் உள்ளடங்கும் இறக்குமதி உள்ளீடுகளின் சதவீதம்
b =இறக்குமதி உள்ளீடுகளின் மீது விதிக்கப்படும் தீர்வையின் சதவீதம்
Eg : n = 10%  a = 60%  b = 5%

$$ERP = \frac{0.1 - (0.6\,.\,0.05)}{(1 - 0.6)} \, x \, 100$$

$$= \frac{0.1 - 0.3}{0.4} \, x \, 100$$

$$= \frac{0.07}{0.4} \, x \, 100$$

$$= 17.5\%$$

**பயனுறுதி வாய்ந்த பாதுகாப்பு வீதத்தை அதிகரிப்பதற்கு இறக்குமதி தீர்வையை பயன்படுத்தும் விதம்.**

1. இறக்குமதி செய்யப்படும் இறுதிப் பொருள்கள் மீதான தீர்வை வீதத்தை அதிகரிக்க வேண்டும்.
2. உள்நாட்டு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் இறக்குமதி உள்ளீடுகள் மீதான தீர்வை வீதத்தை குறைத்தல் வேண்டும்.

## சென்மதி நிலுவை (Bpm6)

### நடைமுறைக்கணக்கு

- **பொருட்கணக்கு**
  - பொருள்
  - நாணயதங்கம் அல்லாதவை
- **பணிகள்**
  - போக்குவரத்து
  - பயணம்
  - காப்புறுதி மற்றும் ஓய்வூதியப் பணிகள்
  - நிதியியல் பணிகள்
  - தொலைத் தொடர்பு மற்றும் கணனி பணிகள்
  - கட்டிடவாக்கம்
- **முதனிலை வருமானம்**
  - ஊழியர்களுக்கான இழப்பீடு
  - முதலீட்டு வருமானம் (வட்டி, இலாபம், பங்குலாபம்)
- **இரண்டாம்நிலை வருமானம்**
  - அரச நடப்பு மாற்றல் (செயற்றிட்டமல்லாக் கொடை)
  - தனியார் நடப்பு மாற்றல் (தொழிலாளர் பண அனுப்புதல்கள்)

### மூலதனக்கணக்கு

- **அரச மூலதன மாற்றம்** (செயற்றிட்டக் கொடை)
- **தனியார் மூலதன மாற்றல்**

### நிதிக்கணக்கு

1. **நேரடி முதலீடுகள்**
2. **சொத்துப்பட்டியல் முதலீடு**
3. **ஏனைய முதலீடு**
   - நாணயமும் வைப்பும்
   - கடன்கள்
4. **ஒதுக்க சொத்துக்கள்**
   - நாணயத்தங்கம்
   - சிறப்பு எடுப்பனவு உரிமை
   - IMFஇன் ஒதுக்குநிலை
   - ஏனைய ஒதுக்க சொத்துக்கள்

---

1. நடைமுறைக் கணக்குமீதி = பொருட் கணக்குதேறியது + பணிகள் தேறியது + முதனிலை வருமானம் தேறியது + இரண்டாம்நிலை வருமானம் தேறியது.
2. மூலதனக் கணக்கு தேறியது = அரச மூலதனமாற்றல் தேறியது + தனியார் மூலதன மாற்றல் தேறியது.
3. நிதிக்கணக்கு தேறியது = நேரடி முதலீடு தேறிய சொத்து + சொத்துப்பட்டியல் தேறிய சொத்து + ஏயை முதலீட்டின் தேறிய சொத்து + தேறிய ஒதுக்கச் சொத்துக்கள்.
4. **திரண்ட நிலுவை = வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்படும் மாற்றம்**

   + / - = **அதிகரிப்பு / வீழ்ச்சி**

   - BPM 6 இன்படி சென்மதிநிலுவையின் திரண்ட நிலுவை காணப்படமாட்டாது.

## அட்டவணை 5.1

## செலுத்தல் நிலுவை பகுப்பாய்வு வெளிப்படுத்துகை (பிபிஎம் 6 இன்படியான வெளிப்படுத்துகை வடிவமைப்பு)

| விடயம் | ஐ.அ.டொ. மில்லியன் | | ரூபா மில்லியன் | |
|---|---|---|---|---|
| | 2014 (அ) | 2015 (ஆ) | 2014 (அ) | 2015 (ஆ) |
| நடைமுறைக் கணக்கு (தேறிய) | -1,988 | -2,009 | -259,436 | -274,562 |
| வர்த்தக நிலுவை | -8,287 | -8,430 | -1,081,987 | -1,146,676 |
| ஏற்றுமதி | 11,130 | 10,505 | 1,453,176 | 1,425,791 |
| இறக்குமதி | 19,417 | 18,935 | 2,535,163 | 2,572,467 |
| பணிகள் (தேறிய) | 1,880 | 2,325 | 245,496 | 316,190 |
| பெறுகைகள் | 5,605 | 6,397 | 731,863 | 869,653 |
| கொடுப்பனவுகள் | 3,725 | 4,072 | 486,367 | 553,464 |
| முதன்மை வருமானம் (தேறிய) | -1,808 | -2,097 | -236,073 | -286,137 |
| பெறுகைகள் | 155 | 127 | 20,263 | 17,253 |
| கொடுப்பனவுகள் | 1,963 | 2,224 | 256,336 | 303,390 |
| இரண்டாந்தர வருமானம் (தேறிய) | 6,227 | 6,193 | 813,128 | 842,082 |
| இரண்டாந்தர வருமானம்: வரவு | 7,046 | 7,007 | 920,035 | 952,568 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 7,018 | 6,980 | 916,344 | 948,957 |
| அரசாங்க மாற்றல்கள் | 28 | 27 | 3,691 | 3,610 |
| இரண்டாந்தர வருமானம்: செலவு | 819 | 814 | 106,906 | 110,486 |
| மூலதனக் கணக்கு (தேறிய) | 58 | 46 | 7,684 | 6,256 |
| மூலதனக் கணக்கு: வரவு | 73 | 71 | 9,586 | 9,562 |
| மூலதனக் கணக்கு: செலவு | 15 | 24 | 1,903 | 3,306 |
| நடைமுறை மற்றும் மூலதனக் கணக்கு (தேறிய) | -1,929 | -1,962 | -251,752 | -268,306 |
| நிதியியல் கணக்கு (தேறிய) | -1,536 | -2,271 | -200,261 | -338,298 |
| நேரடி முதலீடு : சொத்துக்கள் | 67 | 53 | 8,725 | 7,236 |
| நேரடி முதலீடு : பொறுப்புக்கள் | 894 | 681 | 116,721 | 93,681 |
| சொத்துப் பட்டியல் முதலீடு: சொத்துக்கள் | -0.2 | 0.02 | -29 | 3 |
| படுகடன் பிணையங்கள் | -0.2 | 0.02 | -29 | 3 |
| சொத்துப் பட்டியல் முதலீடு: பொறுப்புக்கள் | 2,065 | 689 | 269,768 | 102,286 |
| பங்கு மூலதனம் | 178 | -58 | 23,275 | -7,835 |
| படுகடன் பிணையங்கள் | 1,887 | 747 | 246,492 | 110,121 |
| நிதியியல் பெறுதிகள் | - | - | - | - |
| ஏனைய முதலீடு: சொத்துக்கள் | 973 | 553 | 127,197 | 77,021 |
| நாணயம் மற்றும் வைப்புக்கள் | 276 | 143 | 36,115 | 21,127 |
| வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணம் | 383 | 166 | 50,000 | 21,866 |
| கிடைக்கவேண்டிய ஏனைய கணக்கு | 314 | 244 | 41,082 | 34,028 |
| ஏனைய முதலீடு: பொறுப்புக்கள் | 1,165 | 1,857 | 152,107 | 269,228 |
| நாணயம் மற்றும் வைப்புக்கள் | -292 | 1,457 | -38,152 | 209,324 |
| கடன்கள் | 1,713 | 734 | 223,475 | 99,315 |
| மத்திய வங்கி | -719 | -507 | -93,904 | -68,775 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 1,358 | 787 | 177,243 | 107,301 |
| பொது அரசாங்கம் | 646 | 470 | 84,199 | 63,951 |
| ஏனைய துறைகள் | 429 | -16 | 55,937 | -3,162 |
| வர்த்தக கொடுகடனும் முற்பணங்களும் | -407 | -376 | -53,145 | -51,067 |
| செலுத்தவேண்டிய ஏனைய கணக்குகள் | 151 | 41 | 19,929 | 11,057 |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | - | - | - | - |
| ஒதுக்கு சொத்துக்கள் | 1,548 | 330 | 202,442 | 42,637 |
| நாணயத் தங்கம் | 9 | -59 | 1,154 | -5,156 |
| சிறப்பு எடுப்பனவு உரிமை | -6 | -2 | -748 | 16 |
| ப.நா.நி.இல் ஒதுக்கு நிலைமை | - | - | - | - |
| ஏனைய ஒதுக்கு சொத்துக்கள் | 1,545 | 391 | 202,036 | 47,777 |
| நாணயமும் வைப்புக்களும் | 496 | 116 | 64,720 | 12,566 |
| பிணையங்கள் | 1,049 | 275 | 137,316 | 35,183 |
| தேறிய வழுக்களும் தவறுகளும் | 393 | -308 | 51,492 | -69,992 |
| திரண்ட நிலுவை (இ) | 1,369 | -1,489 | 180,904 | -129,654 |
| மொ.உ.உ.இன் சதவீதமாக | | | | |
| வர்த்தக நிலுவை | -10.4 | -10.2 | | |
| பொருட்கள் மற்றும் பணிகள் | -8.0 | -7.4 | | |
| நடைமுறைக் கணக்கு | -2.5 | -2.4 | | |
| நடைமுறை மற்றும் மூலதனக் கணக்கு | -2.4 | -2.4 | | |

ஒரு நாட்டின் சென்மதி நிலுவை தொடர்பான தகவல்கள் வருமாறு.

| விடயம் | பெறுமதி (மில்லியன் டொலர்களில்) |
|---|---|
| பொது வணிகப்பொருள் தேறியது | - 8200 |
| தேறிய நாணயமல்லாத் தங்கம் | - 10 |
| போக்குவரத்துத் தேறியது | 450 |
| பயணம் தேறியது | 1100 |
| நிதியியல் பணி தேறியது | - 100 |
| தொலைத்தொடர்பு மற்றும் கணனிப் பணிகள் தேறியது | 300 |
| காப்புறுதி மற்றும் ஓய்வூதியம் தேறியது | 30 |
| அரச நடப்பு மாற்றல் தேறியது | 30 |
| தொழிலாளர் பண அனுப்புதல்கள் தேறியது | 6100 |
| ஊழியர் இழப்பீடு தேறியது | - 50 |
| தேறிய முதலீட்டு வருமானம் | - 1700 |
| அரச மூலதன மாற்றல் தேறியது | 50 |
| தனியார் மூலதன மாற்றல் தேறியது | 20 |

பின்வருவனவற்றைக் கணிப்பிடுக?

1. வர்த்தக நிலுவை

2. பணிகள் மீதி

3. முதல் நிலை வருமானக் கணக்கு மீதி

4. இரண்டாம் நிலை வருமானக் கணக்கு மீதி

5. நடைமுறைக் கணக்கு மீதி

6. நடைமுறை மற்றும் மூலதனக் கணக்கு மீதி

**D.** இலங்கையில் ஏற்றுமதிக் கட்டமைப்பு

| | ஏற்றுமதி வகைகள் | ஏற்றுமதி நிலைகள் சதவீதம் | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 1977 | 1983 | 1993 | 2003 | 2014 |
| 1. | விவசாயப் பண்டம் | 79% | 54% | 23% | 21% | 25% |
| | - தேயிலை | 53% | 30% | 14% | 13% | 15% |
| 2. | கைத்தொழில் பண்டம் | 14% | 39% | 73% | 77% | 74% |
| | - புடவைகளும் ஆடைகளும் | 2% | 16% | 49% | 50% | 44% |
| 3. | கனிப்பொருள்களும் ஏனையவையும் | 7% | 7% | 4% | 2% | 1% |
| | மொத்தம் | 100% | 100% | 100% | 100% | 100% |

$Q_1$. தாராள வர்த்தகக் கொள்கை (1977) அறிமுகப்படுத்தப்பட்டபின் இலங்கையின் ஏற்றுமதிக் கட்டமைப்பில் ஏற்பட்ட மாற்றங்களை சுருக்கமாகக் குறிப்பிடுக.

...............................................................................................................

...............................................................................................................

...............................................................................................................

**E.** இலங்கையில் இறக்குமதிக் கட்டமைப்பு

| | இறக்குமதி வகைகள் | இறக்குமதி நிலைகள் சதவீதம் | | | |
|---|---|---|---|---|---|
| | | 1977 | 1993 | 2003 | 2014 |
| 1. | நுகர்வுப் பண்டம் | 42% | 22% | 20% | 20% |
| 2. | இடைநிலைப் பண்டம் | 45% | 51% | 59% | 59% |
| 3. | முதலீட்டுப்பண்டமும் ஏனையவையும் | 13% | 27% | 21% | 21% |
| | மொத்தம் | 100% | 100% | 100% | 100% |

இலங்கையின் ஏற்றுமதி வருமானமும் இறக்குமதிச் செலவீனங்களும்
(மில்லியன் அமெரிக்க டொலர்களில்)

| ஆண்டு | ஏற்றுமதி வருமானம் | இறக்குமதிச் செலவு | வர்த்தக மீதி |
|---|---|---|---|
| 2013 | 10394 | 18003 | -7609 |
| 2014 | 11130 | 19417 | -8287 |
| 2015 | 10505 | 18935 | -8430 |

$Q_2$. இறக்குமதி தாராள வர்த்தகக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டபின்னுள்ள இலங்கையின் இறக்குமதிக் கட்டமைப்பு மாற்றத்தை தருக.

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

**இலங்கையின் பிரதான இடைநிலைப்பண்ட இறக்குமதிகள்.**

1. உரம் பெற்றோலியம்
2. இரசாயன உற்பத்திகள்
3. கடதாசி மற்றும் கடதாசி மட்டைகள்
4. கோதுமை மற்றும் சோளம்
5. புடவை
6. வைரம்
7. வாகன,இயந்திர உதிரிப்பாகங்கள்.

- இலங்கையின் பிரதான ஏற்றுமதிச் சந்தைநாடு **ஐக்கிய அமெரிக்கா** ஆகும்.
- இலங்கையின் பிரதான இறக்குமதிச் சந்தைநாடு **இந்தியா** ஆகும்.

### F வர்த்தக மாற்று வீதம்

$$\text{பண்ட வர்த்தக மாற்றுவீதம்} = \frac{\text{ஏற்றுமதி விலைச் சுட்டெண்} \times 100}{\text{இறக்குமதி விலைச்சுட்டெண்}}$$

$$\text{வருமான வர்த்தக மாற்றுவீதம்} = \frac{\text{ஏற்றுமதி விலைச் சுட்டெண்} \times \text{ஏற்றுமதி தொகைச் சுட்டெண்} \times 100}{\text{இறக்குமதி விலைச்சுட்டெண்}}$$

| | ஏற்றுமதி விலைச் சுட்டெண் | இறக்குமதி விலைச் சுட்டெண் | வர்த்தக மாற்று வீதம் |
|---|---|---|---|
| 2013 | 103.5 | 108.4 | 95.5 |
| 2014 | 105.5 | 108.1 | 97.6 |
| 2015 | 95.2 | 95.3 | 99.9 |

## G. நாணய மாற்று விகிதம்

1. நிலையான நாணய மாற்றுவீதம் → நாணய மதிப்பிறக்கம் / நாணயப் பெறுமதி ஏற்றம்
2. மிதக்கும் நாணய மாற்றுவீதம்
3. முகாமை செய்யப்பட்ட மிதக்கும் நாணய மாற்றுவீதம்

(2, 3) → நாணய பெறுமதி உயர்வு / நாணயப் பெறுமதி தேய்வு

$Q_1$.

1. பெயரளவு நாணயமாற்று வீதம் மெய் நாணய மாற்றுவீதம் வேறுபடுத்துக.

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

2. பெயரளவு பயனுறுதி வாய்ந்த நாணய மாற்றுவீதம் மெய் பயனுறுதி வாய்ந்த நாணய மாற்றுவீதம் வேறுபடுத்துக.

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

3. நாணயப் பெறுமதி தேய்வினால் ஏற்படும் பொருளாதார விளைவுகள் யாவை?

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

4. நிலையான நாணயமாற்று வீதத்தின் நன்மைகள் (5) ஐயும், பிரதிகூலங்கள் (5) ஐயும் தருக.

| நன்மைகள் | பிரதிகூலங்கள் |
|---|---|
| ............................................................ | ............................................................ |
| ............................................................ | ............................................................ |
| ............................................................ | ............................................................ |
| ............................................................ | ............................................................ |
| ............................................................ | ............................................................ |
| ............................................................ | ............................................................ |
| ............................................................ | ............................................................ |

## H. வெளிநாட்டு முதலீடு

| வெளிநாட்டு நேரடி முதலீடு | பட்டியல்படுத்தப்பட்ட முதலீடு |
|---|---|
| • கைத்தொழிற்சாலைகள், மூலதனப் பொருட்கள், இருப்புக்கள் என்பவற்றின் மீது செய்யப்படும் தேறிய முதலீட்டி-னைக் குறிக்கும்.<br>• இம் முதலீட்டின் மூலமாக வெளிநாட்டு மூலதனம், முகாமைத்துவம், தொழில்-நுட்பம் என்பன நாட்டிற்குள் கொண்டு வரப்படும்.<br>• இது நீண்டகால முதலீடாக இருக்கும். | • வெளிநாட்டவர்கள் உள்நாட்டுப் பணத்தினால் வெளிப்படுத்தப்படும் நிதிப் பொறுப்புக்கள் மீது முதலீடு செய்வதனைக் குறிக்கும். (பங்குகள், கடன்முறிகள், வர்த்தகப் பத்திரங்கள், திறைசேரி உண்டியல்கள்)<br>• இது வெளிநாட்டு மூலதனத்தை மட்டும் நாட்டிற்குள் கொண்டுவரும்.<br>• இது குறுகிய முதலீடாக இருக்கும். |

## வெளிநாட்டு முதலீடுகளினால் கிடைக்கும் நன்மைகள்

- வெளிநாட்டு செலாவணி நாட்டிற்குள் வருவதனால் வெளிநாட்டு சொத்து மட்டத்தினை அதிகரிக்கச் செய்யும்.
- நாட்டின் மூலதனம் அதிகரிக்கும்.
- நாட்டின் மெய்வெளியீட்டினை அதிகரிக்கச் செய்யும்.
- தொழில் வாய்ப்புக்கள் அதிகரிக்கும்.
- புதிய தொழில்நுட்பமுறை வருவதனால் தொழில்நுட்பரீதியான வளர்ச்சி ஏற்படும்.
- வெளிநாட்டு முகாமைத்துவம் நாட்டிற்குள் வருவதனால் முகாமைத்துவத்தின் செயற்றிறன் அதிகரிக்கும்.
- பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகள் விருத்தியடையும்.

## வெளிநாட்டு முதலீட்டின் பிரதிகூலங்கள்

- இலாபங்கள், பங்கு லாபங்கள் நாட்டைவிட்டு வெளியேறுதல்
- உள்நாட்டு முதலீட்டாளர்கள் பாதிக்கப்படுவர்.
- இயற்கை வளங்கள் மிகையாக நுகரப்படும்.
- மூலதனச் செறிவான தொழில்நுட்பப் பாவனையால் வேலையில்லாப் பிரச்சினை அதிகரிக்கலாம்.
- குறைந்த சம்பளத்தில் ஊழியச் சுரண்டல் நிகழும்.
- சூழல் மாசடைதல் பிரச்சினையைத் தீவிரப்படுத்தும்.
- சில உள்நாட்டுக் கைத்தொழில்கள் பாதிக்கப்படும்.

**இலங்கைக்குள் உட்பாய்ந்த வெளிநாட்டு நேரடி முதலீட்டு மட்டம்**

| ஆண்டு | மில்லியன் அமெரிக்க டொலர்களில் |
|---|---|
| 2012 | 941 |
| 2013 | 916 |
| 2014 | 607 |
| 2015 | 660 |

**இலங்கையில் நேரடி முதலீட்டை மேற்கொண்ட நாடுகள்**

1. பிரித்தானியா
2. நெதர்லாந்து
3. இந்தியா
4. மலேசியா
5. சீனா

## I. வெளிநாட்டுக்கடன்

$$\text{வெளிநாட்டுக்கடன் சேவைவீதம்} = \frac{\text{வெளிநாட்டுக்கடன் சேவைப்படுத்தல்} \times 100}{\text{பொருள், பண்டங்கள் முதலாந்தர வருமானப் பெறுகை}}$$

$$\text{வெளிநாட்டுக்கடன் சேவைவீதம்} = \frac{\text{வெளிநாட்டுக்கடன் சேவைப்படுத்தல்} \times 100}{\text{பொருள், பண்டங்கள் முதலாந்தர வருமானப் பெறுகை + தனியார் நடப்பு மாற்றல்பெறுகை}}$$

### இலங்கையின் வெளிநாட்டுக்கடன் சேவை வீதத்தின் போக்கு

| | வெளிநாட்டுக்கடன் சேவை வீதம் | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|---|---|
| 1. | பொருள், பணிகள் முதலாந்தர வருமான பெறுகை | 13.2 | 19.7 | 26.8 | 20.8 | 27.7 |
| 2. | பொருள், பணிகள் முதலாந்தர வருமான பெறுகை தனியார் நடப்பு மாற்றல் பெறுகை | 9.3 | 13.5 | 18.7 | 14.5 | 19.5 |

.........................................................................................................................

.........................................................................................................................

.........................................................................................................................

.........................................................................................................................

## J. வெளிநாட்டு சொத்து

- **வெளிநாட்டு சொத்து மட்டத்தின் போதுமான தன்மை**

அ) $\frac{\text{வெளிநாட்டு சொத்து}}{\text{வணிகப் பொருட்களின் இறக்குமதி}} \times 12$

ஆ) $\frac{\text{வெளிநாட்டு சொத்து}}{\text{பொருள், பணிகளின் இறக்குமதி}} \times 12$

| இலங்கையின் வெளிநாட்டுச் சொத்தின் போதுமான மட்டம் | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|---|
| அ) வணிகப் பொருள் இறக்குமதிக்கு (மாதத்தில்) | 4.7 | 5.4 | 5,7 | 6.1 | 5.9 |
| ஆ) பொருள் சேவைகளின் இறக்குமதிக்கு (மாதத்தில்) | 4.3 | 4.7 | 4.8 | 5.1 | 4.9 |

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

## K. பொருளாதார ஒருங்கிணைப்புக்கள்

**i) பொருளாதார ஒருங்கிணைப்பு என்றால் என்ன?**

- ஒரே நாட்டின் பல்வேறு குழுவினரிடையே அல்லது சர்வதேச குழுவினரிடையே தீர்வை வரி மற்றும் தீர்வை வரியல்லாத காரணிகள் எதுவும் இல்லாது பொருள்கள், சேவைகள் மற்றும் காரணிகளை பரிமாற்றும் செயற்பாடு பொருளாதார ஒருங்கிணைப்பு எனப்படும்.

**ii) பொருளாதார ஒருங்கிணைப்பின் வடிவங்களைத் தருக.**

1. முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தம் (P.T.A) Eg : SAP.T.A
2. சுதந்திர வர்த்தக பிரதேசம் (F.T.A) Eg : NAF.T.A
3. சுங்கச் சங்கம் (C.U) Eg : வட அமெரிக்க சங்கம்
4. பொதுச் சந்தை (C.M) Eg : மத்திய அமெரிக்க பொதுச்சந்தை
5. பொருளாதார மற்றும் நிதிச்சங்கம் (E.U & F.M) Eg : ஐரோப்பிய நாணய மற்றும் பொருளாதார சங்கம்
6. முழுமையான பொருளாதார ஒருங்கிணைவு (F.I)

**iii) பொருளாதார ஒருங்கிணைப்பின் நோக்கங்கள் யாவை?**

- நாடுகளுக்கிடையே விலைவேறுபாடுகளை நீக்கி ஒரே விலையை ஏற்படுத்துதல்.
- போட்டித் தன்மையை அதிகரிப்பதன்மூலம் நுகர்வோருக்குக் குறைந்த விலையில் பொருட்களை பெற்றுக் கொடுத்தல்.
- சர்வதேச வர்த்தகத்தை விரிவாக்குவதன் மூலம் உள்நாட்டு உற்பத்தியை அதிகரித்தல்.
- உலக மக்களின் நலன்களை விருத்தி செய்தல்.
- வினைத்திறனுள்ள உற்பத்திக் கட்டமைப்பை ஏற்படுத்தி பொருளாதார பிரதிபலன்களை அதிகரித்தல்.
- மக்களிடையே அரசியல் தொடர்புகளை விருத்தியடையச் செய்தல்.

**iv) பொருளாதார ஒருங்கிணைப்பை ஏற்படுத்த நாடுகள் மேற்கொள்ளும் முதல்கட்ட நடவடிக்கை என்ன?**

- **வர்த்தக ஒப்பந்தங்களைச் செய்தல்.**

1. **இருபக்க வர்த்தக ஒப்பந்தம்**

   Eg : இலங்கை இந்தியா சுதந்திர வர்த்தக ஒப்பந்தம்

2. **பல்பக்க வர்த்தக ஒப்பந்தம்**

   Eg : தென்னாசியா சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் (SAFTA)

3. ஆசிய - பசுபிக் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் (APTA)
4. பொதுத்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒருங்கிணைப்புக்கான வங்காள விரிகுடா நாடுகளின் அமைப்பு (BIMSTEC)

   (வங்காள தேசம், இந்தியா, மியன்மார், இலங்கை, தாய்லாந்து, நேபாளம், பூட்டான்)

## சர்வதேச நிதி நிறுவனங்கள்

| 1. சர்வதேச நாணய நிதியம் | 2. உலக வங்கி |
|---|---|
| • 1947இல் தோற்றம் பெற்றது. தலைமையகம் ஐக்கிய அமெரிக்கா-வின் வாசிங்டன் நகரில் உள்ளது.<br>• அங்கத்துவ நாடுகளின் நிதிப்பற்றாக் குறையை நீக்க குறுங்காலக் கடன்களை வழங்கும்.<br>• அங்கத்துவ நாடுகளின் சென்மதி நிலுவை சமநிலையின்மைகளைக் குறைப்பதற்கு உதவுதல்.<br>• நாணயமாற்று வீதங்களில் நிலையான தன்மையை ஏற்படுத்த உதவுதல்.<br>• சர்வதேச வர்த்தகத்தின் சமநிலை வளர்ச்சிக்கும், பரம்பலுக்கும் உதவுதல். | • 1947இல் தோற்றம் பெற்றது.<br>• 2ம் உலக யுத்தத்தின்போது பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு நிதி உதவியளித்து அவற்றை புனரமைப்பதற்காக இவ்வங்கி உருவாக்கப்பட்டது.<br>• உலக வங்கியின் கீழ் இரு உப நிறுவனங்கள் உண்டு.<br>1. சர்வதேச நிதிக்கூட்டுத்தாபனம் (IFC)<br>2. சர்வதேச அபிவிருத்திச் சங்கம் (IDA)<br>• உலகவங்கியின் நோக்கங்கள் சில வருமாறு :<br>1. அங்கத்துவ நாடுகளின் உற்பத்தி நடவடிக்கைகளுக்கு மூலதன உதவியளித்தல்.<br>2. வெளிநாட்டு தனியார் முதலீடுகளை ஊக்குவித்தல்.<br>3. அங்கத்துவ நாடுகளுக்கு கைத்தொழில் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குதல். |

# M.C.Q

01. குறிப்பிட்ட ஒரு பொருளாதாரத்தில் மனித தேவையை பூர்த்தி செய்யும் பண்டங்கள் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளன,

A - வீதிச் சமிக்ஞை
B - அதிவேகப்பாதை
C - பொதுப் போக்குவரத்துச் சேவை
D - அறிவு

மேற்குறித்தவற்றுள் பொதுப்பொருள்

1. A யும் B யும்
2. A யும் C யும்
3. A யும் D யும்
4. B யும் C யும்
5. B யும் D யும்

02. விலக்குதல் விதிக்கு உட்படாததும் போட்டித்தன்மை வாய்ந்ததுமான பண்பைக் கொண்டது பின்வருவனவற்றுள் எது?

1. கலங்கரை விளக்கம்
2. வீதி விளக்குகள்
3. மீன் வளங்கள்
4. பூங்காக்கள்
5. ஓசோன்படலம்

03. பின்வருவனவற்றுள் எக்காரணி அரசாங்கத் தோல்வியை ஏற்படுத்த மாட்டாது?

1. அரசியல் சுயநலத்தன்மை
2. அதிகார வாதம்
3. இலஞ்ச ஊழல்கள்
4. காரணி அசைவின்மை
5. அரச கட்டுப்பாடுகள்.

04. அரசாங்கம் சில மேன்மையுள்ள பொருட்களை இலவசமாக வழங்கக் காரணம்.

1. அவற்றை தனியுரிமையாளர்கள் மாத்திரம் உற்பத்தி செய்ய முடியும் என்பதனாலாகும்.
2. குறைந்த வருமானம் பெறும் நபர்களுக்கு அவற்றைக் கொள்வனவு செய்யும் ஆற்றல் இல்லாததனாலாகும்.
3. மேன்மைப்பொருட்களின் நுகர்வு எதிர்க்கணிய வெளிவாரிகளை உருவாக்குவதனாலாகும்.
4. மேன்மைப்பொருட்களின் நுகர்வை கட்டுப்படுத்தும் ஆற்றல் இல்லாததுடன் நுகர்வில் போட்டித்தன்மையற்ற காரணத்தினாலாகும்.
5. மேன்மைப்பொருட்களை சந்தை சக்திகளுக்கு ஊடாக நிரம்பல் செய்ய முடியாததனாலாகும்.

05. ஒரு மேன்மைப் பொருளுக்கும் பொதுப் பொருளுக்கும் இடையிலான வேறுபாடு யாதெனில்

1. ஒரு மேன்மைப்பொருள் எப்போதும் தனியார் துறையினரால் வழங்கப்படும் அதேவேளை பொதுப்பொருள் எப்போதும் அரசாங்கத் துறையினரால் வழங்கப்படுவதாகும்.
2. ஒரு மேன்மைப்பொருளை உருவாக்க ஏற்படும் செலவு அத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் அதேவேளை பொதுப்பொருள் எவருக்கும் செலவு ஏற்படாத வகையில் நிரம்பல் செய்யப்படும்.
3. மேன்மைப்பொருளொன்றின் நிரம்பல் வரையறுக்கப்பட்டிருக்கும் அதேவேளை பொதுப்பொருள் ஒன்றின் நிரம்பல் வரையறை அற்றதாகும்.
4. ஒருவர் மேன்மைப்பொருளொன்றை நுகரும் போது அது ஏனையவர்களுக்கு கிடைக்ககூடிய அளவைக் குறைக்கும் அதேவேளை பொதுப்பொருளைத் தனியொருவர் நுகரும்போது அதனால் ஏனையவர்களுக்கு நுகரக்கிடைக்கும் அளவில் பாதிப்பு ஏற்படாது.
5. மேன்மைப்பொருட்களை நுகர்வதனால் எதிர்க்கணிய வெளிவாரிகள் உருவாகும் அதேவேளை பொதுப்பொருட்களின் நுகர்வு நேர்க்கணிய வெளிவாரிகளை உருவாக்கும்.

06. சமூக ரீதியில் நன்மை பயக்கும் என்ற காரணத்தால் அரசாங்கம் ஒரு தனியார் முதலீட்டுத் திட்டத்துக்கு அனுமதி வழங்கத் தீர்மானித்தது. இத்தீர்மானத்தை எடுக்கும்போது தனியார் செலவுகள் ரூபா 700 மில்லியன் ஆகவும் தனியார் நன்மைகள் ரூபா 800 மில்லியன் ஆகவும் வெளிவாரிச் செலவுகள் ரூபா 200 மில்லியனாகவும் மதிப்பிடப்பட்டன.


இத்திட்டத்தின் வெளிவாரி நன்மைகள் தொடர்பில் இம்மதிப்பீடுகள் குறிப்பிடுவது என்ன?

1. வெளிவாரி நன்மைகள் தனியார் நன்மைகளுக்குச் சமமாகும்
2. வெளிவாரி நன்மைகள் ரூபா 100 மில்லியனை விட உயர்வாகும்.
3. வெளிவாரி நன்மைகள் வெளிவாரிச் செலவுகளை விட உயர்வாகும்.
4. வெளிவாரி நன்மைகள் நேர்க்கணியமாக உள்ளதாயினும் ரூபா 100 மில்லியனை விடக் குறைவாகும்.
5. வெளிவாரி நன்மைகள் எதுவும் கிடையாது.

07. சந்தைத்தோல்வியை சீர்செய்யும் அளவீட்டிற்குள் உள்ளடங்காத விடயம் ஒன்று.

1. சொத்துரிமையை உறுதி செய்தல்
2. மானியம் வழங்குதல்
3. வருமானம் மீள் பங்கீட்டினை மேற்கொள்ளல்
4. வெளிவாரி விளைவுகளை ஊக்கப்படுத்துதல்
5. ஒழுங்கு விதிகளை நடைமுறைப்படுத்துதல்

08.




**மேலுள்ள வரிப்படத்தில் a b c முக்கோணத்தினால் காட்டப்படுவது?**

1. எல்லைச் சமூக செலவாகும்
2. எல்லை தனியார் நலனாகும்
3. எல்லை சமூக நலனாகும்
4. சமூக நலனுக்கு ஏற்படக்கூடிய பாதகமான விளைவாகும்.
5. எல்லை வெளிவாரி செலவாகும்.

09. நிறுவனமொன்று தனது உற்பத்தியின்போதேற்படும் வெளிவாரிச் செலவுகளைக் கருத்திற் கொள்ளாதாயின் போட்டிச் சந்தை சமநிலை வெளியீட்டின்போது பின்வருவனவற்றில் எது உண்மையாகும்?

1. விலையானது எல்லைச் சமூகச் செலவினை விட உயர்வாகும்.
2. விலையானது எல்லைச் சமூகச் செலவை விடக் குறைவாக இருக்கும்.
3. விலையானது எல்லைச் சமூகச் செலவுக்குச் சமனாகும்
4. எல்லை தனியார் செலவு, எல்லைச் சமூகச் செலவுக்கு சமனாகும்
5. எல்லை தனியார் செலவு, எல்லை சமூகச் செலவை விட உயர்வகும்.

10. 2014ம் ஆண்டு இலங்கை மத்திய அரசாங்கத்தின் வரி வருவாய்களின் மிக முக்கிய மூலாதாரமாக விளங்கியது

1. வருமான வரி
2. கலால் தீர்வை
3. இறக்குமதித் தீர்வை
4. பெறுமதிசேர் வரி
5. தேசத்தை கட்டியெழுப்பும் வரி

11. விருத்தி முறை வரியமைப்பினைக் கொண்டுள்ள பொருளாதாரம் ஒன்றில் வரிக்கு முந்திய வருமானங்களில் அதிகரிப்பொன்று ஏற்படுகின்றதாயின் வரிக்குப் பிந்திய வருமானங்களுக்கு யாது நிகழும்?

1. அவை குறைந்த வீதாசாரத்தால் வீழ்ச்சியடையும்.
2. அவை அதிகரித்த வீதாசாரத்தால் வீழ்ச்சியடையும்.
3. அவை குறைந்த வீதாசாரத்தால் அதிகரிக்கும்
4. அவை அதிகரித்த வீதாசாரத்தால் அதிகரிக்கும்
5. அவை சமமான வீதாசாரத்தால் வீழ்ச்சியடையும்.

12. குறைந்து செல்லும் வரி முறையின் வரைவிலக்கணமாக அமைவது.

1. எல்லா வரி இறுப்பாளர்களும் தமது வருமானங்களின் முழுத் தொகையின் சமமான அளவுகளை வரியாகச் செலுத்துகின்றனர்.
2. குறைந்த வருமானம் பெறுபவர்களுடன் ஒப்பிடுகையில் உயர்ந்த வருமானம் பெறுவோர் தமது வருமானத்தின் குறைவான ஒரு சதவீதத்தை வரியாகச் செலுத்துவர்.
3. உயர்ந்த வருமானம் பெறுவோர் குறைந்த வருமானம் பெறுபவர்களை விட குறைவான பணத்தொகையை வரியாகச் செலுத்துகின்றனர்.
4. உயர்ந்த வருமானம் பெறுவோர் குறைந்த வருமானம் பெறுவோரை விட அதிகமான பணத்தொகையை வரியாகச் செலுத்துகின்றனர்.
5. வரிச்சுமையானது பின்னோக்கி நகர்த்தப்படலாம்.

13. அரசிறைக் கொள்கைக்கு உதாரணமாக அமைவது. அரசாங்கம்

1. நாணய மாற்று வீதத்தை வீழ்ச்சியடையசெய்ய தீர்மானிப்பதாகும்.
2. குறைந்த மட்டச் சம்பளங்களை அதிகரிக்கத் தீர்மானிப்பதாகும்
3. பாதீட்டு மிகை நிலையினை அதிகரிக்கத் தீர்மானிப்பதாகும்.
4. வட்டிவீதத்தை குறைக்கத் தீர்மானிப்பதாகும்
5. சுற்றாடல் தராதரங்களை நிர்ணயிக்கத் தீர்மானிப்பதாகும்

14. பொருளாதாரம் தீவிரமான மந்தநிலையில் உள்ளபோது பின்வருவனவற்றில் உற்பத்தியை ஊக்குவிக்க வினைத்திறன் மிக்க இறைக்கொள்கையாக அமைவது எது?

1. அரசாங்கச் செலவீட்டு அதிகரிப்பு
2. அரசாங்கச் செலவீட்டு வீழ்ச்சி
3. தனி நபர் வரிகள் அதிகரிக்கப்படல்
4. திறந்த சந்தையில் மத்திய வங்கி பிணையகங்களை விற்பனை செய்தல்
5. திறந்த சந்தையில் மத்தியவங்கி பிணையகங்களை கொள்வனவு செய்தல்

15. விரிவாக்க அரச நிதிக்கொள்கையின் பிரதான பண்பு எது?

1. பாதீட்டுப் பற்றாக்குறையை பூச்சிய மட்டத்தில் பேணுதல்
2. பண நிரம்பலை விரிவு படுத்துவதற்கு ஏற்றவாறு நிதிக் கொள்கையை பயன்படுத்துதல்.
3. வரிகளை விட அரச செலவுகள் அதிகரிக்கும் வகையில் தொழிற்படல்
4. அரச செலவை விட வரியை அதிகரிக்கக் கூடிய வகையில் தொழிற்படல்
5. மிகைப் பாதீட்டுக் கொள்கையை நடைமுறைப்படுத்துதல்.

16. 2014ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கத்தின் மொத்த நடைமுறைச் செலவில் பொருள் பணிகள் மீதான நடைமுறைச்செலவு எத்தனை சதவீதமாகக் காணப்பட்டது?

1. 42%     2. 43%     3. 40%     4. 46%     5. 49%

17. அண்மையாண்டுகளில் இலங்கை அரசாங்கத்தின் மொத்தச் செலவுக்குள் அதிகூடிய சதவீதத்தைக் கொண்டிருக்கும் செலவுக் கூறு எது?

1. பொருள் பணிகள் மீதான நடைமுறைச்செலவு
2. நடப்பு மாற்றல் கொடுப்பனவுகள்
3. பொதுப்படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவு
4. அரச பணியாளர்களுக்குரிய சம்பளக் கொடுப்பனவு
5. அரசின் மூலதனச் செலவுகள்

18. அரசாங்கம் அண்மையாண்டுகளில் உள்நாட்டு சந்தைக்கடனைப் பெற்றுக்கொள்வதற்கு பயன்படுத்திய முதன்மைக்கருவி எது?

1. திறைசேரி உண்டியல்கள்
2. ரூபாய்ப் பிணைகள்
3. இலங்கை அபிவிருத்தி முறி
4. திறைசேரி முறி
5. மத்திய வங்கி முற்பணங்கள்

19. 2013- 2014 காலப்பகுதியில் இலங்கை அரசின் பாதீட்டுப் பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் எத்தனை சதவீதமாகக் காணப்பட்டது?

1. 5% - 6% 2. 6% - 7% 3. 8% - 9%
4. 7% - 8% 5. 4% - 5%

20. “வரிக்குரிய உண்மையான விபரங்களை தெரிவித்தல்” எவ்வாறு அழைக்கப்படும்?

1. வரி அடிப்படை
2. நேர் வரி
3. வரி வீதம்
4. வரித்தாக்கம்
5. வரி இசைவு

21. இங்கிலாந்து மட்டும் போர்த்துக்கல் ஆகிய நாடுகளில் ஓரலகு ஊழிய உள்ளீட்டைக் கொண்டு பெற்க்கூடிய வெளியீட்டின் அளவுகல் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| பொருள் | இங்கிலாந்து | போர்த்துக்கல் |
|---|---|---|
| புடவை | 20 | 24 |
| வைன் | 2 | 12 |

மேற்படி தரவுகளின் அடிப்படையில் நாம் பெறக்கூடிய முடிவு

1. புடவை மற்றும் வைன் உற்பத்தியில் போர்த்துக்கல் ஒப்பீட்டு நன்மையைக் கொண்டுள்ளது என்பதாகும்.
2. புடவை மற்றும் வைன் உற்பத்தியில் இங்கிலாந்து ஒப்பீட்டு நன்மையைக் கொண்டுள்ளது என்பதாகும்.
3. புடவை உற்பத்தியில் ஒப்பீட்டு நன்மை போர்த்துக்கல்லுக்கும் வைன் உற்பத்தியில் ஒப்பீட்டு நன்மை இங்கிலாந்துக்கும் உள்ளது என்பதாகும்.
4. புடவை உற்பத்தியில் ஒப்பீட்டு நன்மை இங்கிலாந்து வைன் உற்பத்தியில் ஒப்பீட்டு நன்மை போர்த்துக்கல்லுக்கும் உள்ளது என்பதாகும்.
5. இங்கிலாந்து புடவை மற்றும் வைன் உற்பத்தியில் முழு நன்மையைக் கொண்டுள்ளது என்பதாகும்.

22. X மற்றும் Y ஆகிய நாடுகளில் உணவு மற்றும் புடவைகள் உற்பத்தி அலகொன்றுக்கான ஊழியச் செலவுகள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| நாடு | ஓரலகு உணவு உற்பத்திக்கான ஊழிய அலகுகள் | ஓரலகு புடவை உற்பத்திக்கான ஊழிய அலகுகள் |
|---|---|---|
| X | 2 | 6 |
| Y | 6 | 8 |


இரு நாடுகளும் வர்த்தகத்தின் மூலம் நன்மை அடைய வேண்டுமாயின் பரிமாற்ற வீதம் எந்த வீச்சினுள் அமைய வேண்டும்?

1. 1 அலகு உணவுக்காக புடவை அலகுகள் 1.33 - 3.00 வரையாகும்.
2. 1 அலகு உணவுக்காக புடவை அலகுகள் 0.75 - 1.00 வரையாகும்.
3. 1 அலகு உணவுக்காக புடவை அலகுகள் 1.00 - 1.33 வரையாகும்.
4. 1 அலகு உணவுக்காக புடவை அலகுகள் 0.33 - 0.75 வரையாகும்.
5. 1 அலகு உணவுக்காக புடவை அலகுகள் 2.00 - 6.00 வரையாகும்.

23. ஒப்பீட்டு நன்மை என்பதன் கருத்து யாதெனில் நாடொன்று

1. மற்றொரு நாட்டை விட அதிகளவில் பொருளொன்றை உற்பத்தி செய்யும் ஆற்றல்
2. மற்றொரு நாட்டைவிட குறைந்த எல்லைச்செலவில் பொருளொன்றை உற்பத்தி செய்யும் ஆற்றல்
3. மற்றொரு நாட்டை விட குறைந்த நீண்டகாலசராசரிச்செலவில் பொருளொன்றை உற்பத்தி செய்யும் ஆற்றல்.
4. மற்றொரு நாட்டை விட குறைந்த அமையச்செலவில் பொருளொன்றை உற்பத்தி செய்யும் ஆற்றல்
5. பொருளொன்றை மற்றொரு பொருளை விட அதிகளவில் உற்பத்தி செய்யும் ஆற்றல்.

24. மேற்படி வரைபடமானது யப்பான் (J J) கொரியா (K K) ஆகிய இரு நாடுகளின் கற்பனையான உற்பத்தி சாத்திய வளையிகளைக் காட்டுகின்றது. போக்குவரத்துச் செலவுகளும் வர்த்தகத் தடைகளும் இல்லையாயின்.




1. ஆடை, அரிசி என்ற இரண்டினது உற்பத்தியிலுமே கொரியாவிற்கு முழு நலன் உள்ளது.
2. வர்த்தகத்தின் மூலம் இரு நாடுகளுமே நன்மை பெறமாட்டா.
3. ஆடை, அரிசி என்ற இரண்டினது உற்பத்தியிலுமே யப்பானிற்கு ஒப்பீட்டு நலன் உண்டு
4. வர்த்தகத்தின் மூலம் இரு நாடுகளுமே நன்மை பெறும்
5. யப்பான் கொரியாவிற்கு அரிசியை ஏற்றுமதி செய்யும்

25. பின்வரும் அட்டவணையில் சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளில் ஓர் அலகு வெளியீட்டைப் பெற்றுக் கொள்வதற்காக தேவைப்படும் ஊழிய மணித்தியாலங்களைக் காட்டுகின்றது.

| நாடுகள் | கணனி | ஆடை |
|---|---|---|
| சீனா | 100 மணித்தியாலம் | 10 மணித்தியாலம் |
| ஜப்பான் | 80 மணித்தியாலம் | 07 மணித்தியாலம் |

**இத்தரவுகளின் அடிப்படையில் பின்வரும் கூற்றுக்களில் சரியானது எது?**

1. கணனி, ஆடை இரண்டு உற்பத்தியிலும் சீனா முழு நன்மையைப் பெற்றுள்ளது.
2. சீனா ஆடையிலும் ஜப்பான் கணனியிலும் ஒப்பீட்டு நன்மையைப் பெற்றுள்ளது.
3. சீனா கணனியில் முழு நன்மையையும் ஒப்பீட்டு நான்மையையும் பெற்றுள்ளது.
4. ஜப்பான் ஆடையை ஏற்றுமதி செய்ய சீனா கணனியை ஏற்றுமதி செய்யும்
5. ஜப்பான் கணனியை ஏற்றுமதி செய்ய சீனா ஆடையை ஏற்றுமதி செய்யும்

26. பின்வரும் எச்சந்தர்ப்பத்தில் வர்த்தக மாற்று விகிதம் இலங்கைக்கு பாதகமாக மாறும்?

1. அதன் இறக்குமதியினது அளவிலும் பார்க்க ஏற்றுமதியினது அளவு கூடுதலாக அதிகரிக்கும்போது.
2. அதன் ஏற்றுமதியினது அளவிலும்பார்க்க இறக்குமதிகளின் அளவு கூடுதலாக அதிகரிக்கும்போது.
3. அதன் இறக்குமதி விலைகளிலும் பார்க்க ஏற்றுமதி விலைகள் கூடுதலாக அதிகரித்தல்.
4. அதன் ஏற்றுமதி விலைகளும் பார்க்க இறக்குமதி விலைகள் கூடுதலாக அதிகரிக்கின்றது.
5. அதன் இறக்குமதி செலவீட்டிலும் பார்க்க ஏற்றுமதி உழைப்புகல் கூடுதலாக அதிகரித்தல்.

27. பின்வரும் அட்டவணை ஒரு நாட்டின் ஈராண்டுகாலப் பகுதியிலான பொருளாதாரச் செயற்பாட்டினைக் காட்டுகின்றது.

| ஆண்டு | ஏற்றுமதிகளின் அளவுச்சுட்டி | இறக்குமதிகளின் அளவுச்சுட்டி | நாணயமாற்று வீதம் |
|---|---|---|---|
| 1 | 100 | 100 | 130 |
| 2 | 100 | 85 | 130 |

பின்வருவனவற்றுள் எது மேற்போந்த விபரங்களுடன் இசைவானது?

1. ஏற்றுமதிகளின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது.
2. இறக்குமதிகளின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது.
3. வர்த்தகமாற்று விகிதத்தில் ஓர் மேம்பாடு ஏற்பட்டுள்ளது.
4. வர்த்தகநிலுவை மோசமடைந்து சென்றுள்ளது.
5. வர்த்தக மாற்று விகிதத்தில் ஓர் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

28. ஒரு நாட்டின் 'இறக்குமதியின் கொள்வனவாற்றல்' தங்கியிருக்கக்கூடிய மிக முக்கிய காரணிகள் எவை?

1. ஏற்றுமதிப் பண்டங்கள் சேவைகளின் அளவும் நாணயமாற்று வீதமும்
2. ஏற்றுமதிப் பெறுமதியும் அரச கொள்கைகளும்.
3. பண்டங்கள் சேவைகளின் இறக்குமதி அளவும், இறக்குமதி விலையும்.
4. வர்த்தக மீதியும் நாணயமாற்று வீதமும்
5. அந்நிய செலாவணி உழைப்பும் இறக்குமதிப் பொருட்கள் சேவைகளின் விலையும்.

29. பின்வரும் கருதுகோள்ரீதியான சென்மதி நிலுவைத் தரவுகளைக் கருதுக.

| வகை | பெறுமதி பில்லியன் ரூபாவில் |
|---|---|
| பொருள் இறக்குமதி | 18000 |
| பொருள் ஏற்றுமதி | 10000 |
| பணிகள் பெறுகை | 4600 |
| பணிகள் கொடுப்பனவு | 3500 |
| முதன்மை வருமானம் தேறியது | -1700 |
| இரண்டாம் தர வருமானம் தேறியது | 5600 |
| மூலதனக் கணக்கு வரவு | 120 |
| மூலதனக் கணக்குச் செலவு | 20 |

மேலுள்ள தகவல்களுடன் இசைவான கூற்று எது?

1. வர்த்தக மீதி 8000 பில்லியன் ரூபாவாக உள்ளது.
2. பொருள் பணிகள் கணக்கு தேறியது - 9100 பில்லியன் ரூபாவாகவுள்ளது.
3. சென்மததி நிலுவைக்கணக்கின் நடைமுறை மீதி 3000 பில்லியன் ரூபாவாகவுள்ளது.
4. நடைமுறை மற்றும் மூலதனக் கணக்கு மீதி - 2900 பில்லியன் ரூபாவாகவுள்ளது.
5. நடைமுறைக் கணக்கு மீதி - 3100 பில்லியன் ரூபாவாகவுள்ளது.

30. பின்வருவனவற்றில் எது இலங்கையின் அருவ (Invisible) ஏற்றுமதி வகையினுள் உள்ளடங்கும்?

1. ஜப்பானியரொருவர் இலங்கை வரும் நோக்கில் ஸ்ரீலங்கன் விமான சேவையின் பயணச்சீட்டை வாங்கச் செலவிட்ட தொகை.
2. ஜப்பானிய சுற்றுலாப்பயணி ஒருவர் சிங்கப்பூரில் மேற்கொண்ட செலவுகளின் தொகை.
3. இலங்கை வீட்டுப்பணிப்பெண் ஒருவர் சவுதிஅரேபியாவில் மேற்கொள்ளும் செலவுகள்.
4. சர்வதேச நாணய நிதியிடமிருந்து பெற்ற கடனை இலங்கை அரசாங்கம் மீளச் செலுத்துதல்.
5. இலங்கையிலுள்ள ஆடை தயாரிப்பு நிறுவனமொன்று உழைத்த இலாபத்தை கொரியாவிலுள்ள தாய்க்கம்பனிக்கு அனுப்புதல்

31. ஜேர்மனியைச் சேர்ந்த முதலீட்டாளர் ஒருவர் இலங்கைக் கம்பனி ஒன்றின் பங்குகளைக் கொள்வனவு செய்வாராயின் இக்கொடுக்கல் வாங்கல் இலங்கையின் சென்மதி நிலுவையில் உள்ளடக்கப்படுவது.

1. நடைமுறைக்கணக்கின் ஒரு பெறுகையாகவாகும்.
2. நடைமுறைக்கணக்கின் ஒரு செலுத்தலாகவாகும்.
3. மூலதனக் கணக்கின் ஒரு பெறுகையாகவாகும்.
4. மூலதனக்கணக்கின் ஒரு செலுத்தலாகவாகும்.
5. நிதிக்கணக்கின் ஒரு பெறுகையாகவாகும்

32. ரஷ்ய நாட்டிலுள்ள பல்கலைக்கழகம் ஒன்றில் கல்வி கற்கும் தன் மகனுக்கு பல்கலைக் கட்டணத்தைச் செலுத்துவதற்காக இலங்கையிலுள்ள பெற்றோரால் அனுப்பப்படும் பணம் சென்மதிநிலுவையின் எக்கணக்கில் பதியப்படும்?

1. வணிகப்பொருள் கணக்கில்
2. சேவைகள் கணக்கில்
3. 2ம் தர வருமானங்களில்
4. முதனிலை வருமானக் கணக்கில்
5. நிதிக் கணக்கில்.

33. டொலருக்கும் இலங்கை ரூபாவுக்கும் இடையிலான நாணயமாற்றுவீதம் $1 = ரூபா 130 இலிருந்து $1 = ரூபா 140 ஆக மாற்றமடையுமாயின்,

1. இலங்கை ரூபா டொலருக்கெதிராக பெறுமதி அதிகரித்து செல்கின்றது.
2. அமெரிக்காவுக்கான இலங்கையின் ஏற்றுமதிகள் வீழ்ச்சியடையும்.
3. அமெரிக்காவிலிருந்தான இலங்கையின் இறக்குமதிகள் வீழ்ச்சியடையும்.
4. இலங்கையிலிருந்தான அமெரிக்காவின் இறக்குமதிகள் வீழ்ச்சியடையும்.
5. இலங்கையின் வர்த்தகப்பற்றாக்குறை அதிகரித்து செல்லும்.

34. இலங்கையின் குறிப்பிட்ட ஒரு கூடைப்பொருளை கொள்வனவு செய்ய 600 ரூபா செலவிடப்படுவதுடன் அக்கூடைப்பொருளை அமெரிக்காவில் கொள்வனவு செய்ய 8 டொலர் செலவாகும் எனின் கொள்வனவு சக்தி சம மதிப்பு நாணய மாற்று வீதம் ஒரு டொலருக்கு ரூபா.

1. 50ஆகும் 2. 75ஆகும் 3. 80ஆகும் 4. 150ஆகும் 5. 160ஆகும்

35. நாணய மதிப்பிறக்கம் ஒன்று பின்வருவனவற்றில் எந்நிலமையின் கீழ் அதிக செயற்திறன் வாய்ந்ததாக இருக்கும்?

| | ஏற்றுமதிக் கேள்வியின் விலை நெகிழ்ச்சி | இறக்குமதிக் கேள்வியின் விலை நெகிழ்ச்சி | ஏற்றுமதி நிரம்பலின் விலை நெகிழ்ச்சி |
|---|---|---|---|
| 1. | - 0.6 | - 0.2 | + 0.2 |
| 2. | - 0.2 | - 0.5 | + 0.1 |
| 3. | - 0.2 | - 0.4 | - 0.2 |
| 4. | - 0.8 | - 0.9 | + 1.3 |
| 5. | - 0.3 | - 0.2 | + 0.4 |

36. பயனுறுதி வாய்ந்த பாதுகாப்பு வீதம்.

1. பயனுறுதி வாய்ந்த தீர்வைகளுக்கும் பயனுறுதியற்ற தீர்வைகளுக்கும் இடையிலான வேறுபாட்டைக் காட்டுகிறது.
2. இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்கு நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய ஆகக்குறைந்த தீர்வையின் அளவைக் காட்டுகின்றது.
3. அரசாங்கத்தின் வரி வருவாயை அதிகரிப்பதில் தீர்வைகள் எந்தளவுக்கு பயனுறுதியுடையதாக உள்ளது என்பதைக் காட்டும்
4. குறிப்பிட்ட ஒரு தீர்வைக் கட்டமைப்பின் கீழ் உள்நாட்டு உற்பத்தியில் கூட்டப்பட்ட பெறுமதியை எந்தளவுக்கு அதிகரிக்க முடியும் என்பதை சதவீதமாகக் காட்டுவதாகும்.
5. குறிப்பிட்ட ஒரு தீர்வைக் கட்டமைப்பின் கீழ் உள்நாட்டு உற்பத்தியின் செலவுகள் எந்தளவு அதிகரிக்கும் என்பதை சதவீதமாகக் காட்டுவதாகும்

37. 2014 இலங்கையின் சர்வதேச வியாபார திசையின் அடிப்படையில் பிரதான ஏற்றுமதிச் சந்தையும், இறக்குமதிச் சந்தையுமாக அமைவது?

1. யப்பானும் மத்திய கிழக்கு நாடுகளுமாகும்.
2. ஐக்கியஅமெரிக்காவும் இந்தியாவுமாகும்.
3. ஐரோப்பியச் சங்கமும் இந்தியாவுமாகும்.
4. ஐக்கியஅமெரிக்காவும் சீனாவுமாகும்.
5. ஜேர்மனியும் ஆசியாவுமாகும்.

38. சர்வதேச நாணய நிதியத்திற்குரிய ஒதுக்குச் சொத்துக்களாகிய சிறப்பு எடுப்பனவு உரிமை (SDR)களின் பெறுமதியைத் தீர்மானிக்கின்ற பண வகைகளைக் கொண்ட சரியான விடை யாது?

1. அமெரிக்க டொலர், ஸ்டேலிங் பவுண், யூரோ மற்றும் இந்திய ரூபாய்.
2. அமெரிக்க டொலர், ஸ்டேலிங் பவுண், யென் மற்றும் இந்திய ரூபாய்.
3. அமெரிக்க டொலர், ஸ்டேலிங் பவுண், யென் மற்றும் யூரோ.
4. அமெரிக்க டொலர், பிரான்சின் பிராங், யென் மற்றும் மற்றும் இந்திய ரூபாய்.
5. ஸ்டேலிங் பவுண், யென், யூரோ மற்றும் இந்திய ரூபாய்.

39. அண்மைக்கால இலங்கையின் ஏற்றுமதி அமைப்பினை சரியாகக் காட்டும் கூற்றாவது.

| | விவசாய | கைத்தொழில் | கணியம் மற்றும் ஏனைய |
|---|---|---|---|
| 1. | 25.1% | 74.2% | 0.7% |
| 2. | 23.9% | 74.3% | 1.8% |
| 3. | 22.8% | 74.9% | 2.3% |
| 4. | 24.6% | 74.9% | 4.5% |
| 5. | 24.8% | 74.6% | 0.6% |

40. "அங்கத்தவ நாடுகளின் சென்மதி நிலுவைச் சமமின்மைத் தீவிரத்தையும், அவை நிலவும் கால எல்லைகளை குறுகியதாக்குதல்" என்ற நோக்கத்துடன் செயற்படும் சர்வதேச நிறுவனம்.

1. உலக வங்கி
2. ஆசிய அபிவிருத்தி வங்கி
3. சர்வதேச நாணய நிதியம்
4. உலக வர்த்தக நிறுவனம்
5. ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம்.

# SUBRA சித்தங்கேணி

வலிமேற்கில் கலை வர்த்தக தொழிநுட்ப
பிரிவுகளுக்கான தனித்துவமான நிறுவனம்

பொருளியல்
**S.ஜெயகுமார்**
(B.A(Hons) ECO SPI, M.A.in Eco, P.G.D.E)

கணக்கீடு
**T.விசுவராஜ் B.B.A (Acc SPL)**

வணிகக்கல்வி
**A.சுபேசன் B.B.A (Hons)**

# NAC மானிப்பாய்

வர்த்தக பிரிவுக்கான தனித்துவமான நிறுவனம்

பொருளியல்
**S.ஜெயகுமார்**
(B.A(Hons) ECO SPI, M.A.in Eco, P.G.D.E)

கணக்கீடு
**R.வின்சன் B.B.A, P.G.D.E**

வணிகக்கல்வி
**S.பிரதீபன் M.Com ,P.G.D.E**

தாயகம் டிஜிற்றல்
-யாழ்.பல்கலைக் கழகம் அருகில்-